# பாட்டாளி சிந்தனை

Volume 23 No. 10

June 2013

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3


## நிலம் கையகப்படுத்தல், புனர்வாழ்வளித்தல், மறுகுடியமர்த்தல் மசோதா 2011

# பணக்காரர்களின் கஜானாவை நிரப்ப, ஏழை விவசாயிகளை அழித்தொழிக்கும் சதித்திட்டம்

*மேற்கு வங்கத்தின் நந்திகிராமிலும் சிங்கூரிலும் விவசாயிகளின் நிலங்களையும் வாழ்வாதாரங்களையும் வலுக்கட்டாயமாகப் பறித்ததை எதிர்த்து எழுந்த போர்க்குணமிக்க பெருந்திரள்மிக்க விவசாயிகளின் போராட்ட இயக்கம், நாடு முழுவதிலும் உள்ள போராடும் விவசாயிகளுக்கு புதிய செய்தியை அறிவித்தது. பல்வேறு ஆட்சியாளர்கள் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு எந்தத் தயவு தாட்சண்யமுமின்றி வழக்கமாக உபயோகித்து வந்த தற்போது நடை முறையிலிருந்துவரும் 'நிலம்கையகப்படுத்தும் சட்டம் **1894**'க்கு எதிராக ஒரு பலமான எதிர்ப்பு உணர்வையும் இதுபோன்ற நில அபகரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக துணிவோடு எழுந்துநிற்கும் தைரியத்தையும் வழங்கியிருக்கிறது என்பதே அந்த செய்தியாகும்.*

அதன்பின்பு இந்த இக்கட்டான நிலைமையிலிருந்து வெளிவருவதற்கு ஆட்சியாளர்கள் மிகத்தீவிரமாக முயன்று வருகிறார்கள். புதிய வழி வகைகள் குறித்து சிந்திப்பதற்கும் அவர்களை அது தூண்டியது. இதன் பின்பு செப்டம்பர் **7, 2011** அன்று காங்கிரஸ் தலைமையிலான மத்திய கூட்டணி அரசாங்கம் மிகுந்த விமர்சனத்திற்கும் சர்ச்சைகளுக்கும் உள்ளான நிலம் கையகப்படுத்துதல், புனர்வாழ்வளித்தல் மற்றும் மறு குடியமர்த்தல் மசோதா–**2011** (LARR Bill-2011) பாராளுமன்றத்தில் அறிமுகப் படுத்தியது. ஆளும் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அதே சமயத்தில் தேசிய ஆலோசனைக் கவுன்சிலின் தலைவராகவும் இருந்துவரும் சோனியா காந்தியவர்கள் இதனை நிறைவேற்ற அதிக அழுத்தம் கொடுத்தும் கூட நாடுமுழுவதிலும் இருந்துவந்த பரந்துபட்ட எதிர்ப்பு இந்த மசோதாவை பாராளுமன்றத்தின் நிலைக் குழுவின் மறுபரிசீலனைக்கு அனுப்பிட நிர்ப்பந்தித்தது. பின்பு இந்த மசோதா டிசம்பர் **13, 2012**ல் மத்திய அமைச்சரவையின் ஒப்புதலோடு பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டது. ஆயினும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதனை படித்தறிவதற்கு காலஅவகாசம் கேட்டதனால், இந்த மசோதாகுறித்த விவாதமானது ஏப்ரல் **22, 2013**ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட வேண்டியதாயிற்று. ஆளும் முதலாளித்துவ வர்க்கத்திற்கு அடிபணிந்து சேவை செய்யும் பாராளுமன்ற அரசியல் கட்சிகளுக்கிடையில் இந்த மசோதா குறித்து ஒரு ஒருமித்த முடிவு

தொடர்ச்சி **2**ம் பக்கம்

## தோழர் பிரதிபா முகர்ஜி அவர்களுக்கு செவ்வணக்கம்



சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)ன் மேற்குவங்க மாநிலக் குழு உறுப்பினரும் பிரசித்திபெற்ற வெகுஜன தலைவருமான தோழர் பிரதிபா முகர்ஜி அவர்கள் கல்கத்தா ஹார்ட் கிளினிக்கில் மே 17 அன்று தனது 77வது வயதில் இன்னுயிர் நீத்தார். தகவல் அறிந்தவுடன் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர்களான தோழர் ரஞ்சித்தார், தோழர் அசித் பட்டாச்சார்யா, மத்தியக்கமிட்டி உறுப்பினர்களான தோழர் தேவபிரசாத்சர்க்கார், தோழர் சுமன்போஸ் மற்றும் தோழர் சாயாமுகர்ஜி, மேற்கு வங்க மாநில செயற்குழு உறுப்பினர்கள்,

தொடர்ச்சி **8**ம் பக்கம்

## பாராளுமன்றத்தில் பாவனைப் போராட்டம்

# பாராளுமன்றத்துக்கு வெளியிலான போராட்டத்தை அரசியல் கட்சிகள் கவனமாக தவிர்ப்பது மோசடி, ஏமாற்று, குற்றம் மற்றும் ஊழலை அதிகரிக்க அனுமதிக்கிறது

மெகா ஊழல்களும் முறைகேடுகளும் தினசரிகள் மற்றும் தொலைக்காட்சி சேனல்களின் தலைப்புச்செய்திகளாவது வாடிக்கையாகிவிட்டன. இத்தகைய அநியாயமான அக்கிரமமான கிரிமினல் நடவடிக்கைகளில் அமைச்சர்கள் வாக்குவங்கி அரசியல் நடத்தும் கட்சிகளின் உயர்மட்ட தலைவர்கள் ஆகியோருக்கு தொடர்பு இருப்பதாக அன்றாடம் பரபரப்புட்டும் தகவல்கள் வெளியாகின்றன. இத்தகைய பரபரப்பு தகவல்களாக சமீபத்தில் வெளிவந்தவை **1.** பலகோடி ரூபாய் நிலக்கரி சுரங்க ஊழலில் குற்றவாளிகளை பாதுகாப்பதற்காக மத்திய குற்றப்புலனாய்வுத்துறையான சி.பி.ஐ அறிக்கையை மத்திய சட்ட அமைச்சர் திருத்தினார் **2.** ரயில்வே துறையில் உயர்பதவி ஒன்றை வழங்குவதற்காக ரயில்வே போர்டு உறுப்பினரிடமிருந்து ரயில்வே அமைச்சரின் உறவினர் லஞ்சம் வாங்கினார் **3.** பரபரப்பான **2**ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் பிரதமருக்கு சம்பந்தம் இல்லை என்று பாராளுமன்ற கூட்டுக்குழு அளித்த அறிக்கையின் மீது எழுந்த சர்ச்சை **4.** அரசாங்கம் முறைப்படுத்தும் அமைப்புகள் குற்றத்தடுப்பு பிரிவுகள் ஆகியவற்றுக்கு அருகாமையில் இருந்துகொண்டே கஷ்டப்பட்டு சம்பாதித்த மக்கள் பணத்தை சிட் ஃபண்ட் என்ற பெயரில் மேற்கு வங்க சாரதா சிட் ஃபன்டு போன்ற அமைப்புகள் விழுங்கி ஏப்பம் விட்ட விவகாரம். இந்த சிட் ஃபண்ட் விவகாரத்திலும்கூட முறைகேடுகளில் ஈடுபட்டோர் இதுபோன்ற பிற முந்தைய முறைகேடுகளான ஐ.பி.எல். முறைகேடு **2**ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு காமன் வெல்த் போட்டிகள் ஊழல் ஆதர்ஷ் வீட்டு வசதி ஊழல் டெல்கி ஸ்டாம்ப் பேப்பர் ஊழல் இராணுவ தளவாடங்கள் கொள்முதலில் ஊழல் இன்னும் இதுபோன்ற பிற ஊழல்களில் நடந்ததைப் போல நிதி அமைச்சர்கள் அரசியல் பெரும்புள்ளிகள் நிர்வாகத்தின் உச்சியில் இருப்போர் ஆகியோரோடு கூட்டு சேர்ந்துகொண்டு செயல்படுகிறார்கள் என்பதும் அப்பட்டமாக வெளியாகிவிட்டன. அதிகரித்துவரும் இத்தகைய நிதி முறைகேடுகள் குற்றங்களுக்கு எதிராக அல்லலுறும் மக்களின் கோபாவேசமும் எதிர்ப்பும் நாளுக்கு நாள் அதிகரித்து இவையனைத்திற்கும் முடிவுகட்ட வேண்டும் என நினைக்கின்றனர். ஆனால் இந்த சாக்கடையை எவ்வாறு தூய்மைபடுத்துவது என்று நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

### குற்றங்களும் குற்றமனப்பான்மைகளும் விண்ணை முட்டுகின்றன

சமீபகாலமாக இந்த தொடர் குற்றங்கள் மற்றும் நிதி முறைகேடுகளுக்கு எதிரான போராட்டத்தில் களமிறங்கியிருப்பதாக பிரதான எதிர்க் கட்சியான பா.ஜ.க காட்டிக்கொள்கிறது. இவையனைத்திற்கும் ஆளும் காங்கிரஸ் கட்சியே பொறுப்பு என்று கூறி பாராளுமன்றம் செயல்படமுடியாமல் இரு அவைகளின் நடவடிக்கைகளையும் முடக்குவதோடு அவ்வப்போது வெளிநடப்பும் செய்கிறது. ஊழல்கள் தவறான நடத்தைகள் நிறுவனப்படுத்தப்பட்ட குற்றங்கள் ஆகியவற்றுக்கு எதிராக தாங்கள் எவ்வளவு தீவிரமாக போராட்டம் நடத்து

தொடர்ச்சி **6**ம் பக்கம்

## எல் ஏ ஆர் ஆர் மசோதா 2011

# விவசாயிகள் தாம் காலி செய்யப்படுவதை எதிர்த்துப் போராட சிங்கூர், நந்திகிராம் இயக்கங்கள் தைரியத்தையும் உறுதியையும் வழங்கின

1ம் பக்கம் தொடர்ச்சி

எட்டப்பட்டுவிட்டதானது ஏப்ரல் 19ல் அரசுத் தரப்பு செய்தித் தொடர்பாளரின் பெருமைப் பேச்சிலிருந்து தெரிந்தது. ஆனால் அதன்பிறகு சி.பி.ஐ.(எம்) உள்ளிட்ட சில கட்சிகள் மக்களின் அதிருப்தியான எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்டு தங்களின் பெயரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக எதிர்ப்புக் காட்டுவது போன்று பாவனை செய்தார்கள். இந்த நிலம் கையகப் படுத்தும் மசோதாவை நிறைவேற்றும் முயற்சிகள் குறித்து மேலும் விவாதிப்பதற்கு முன்பு இந்த மசோதாவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை தெரிந்து கொள்வது நல்லது.

### மசோதாவில் பல முக்கியப் பிரச்சினைகள் கண்டும் காணாமல் விடப்பட்டுள்ளன

"இம் மசோதா நிலச்சொந்தக்காரர்களுக்கும் பாதிக்கப்பட்ட குடும்பக்களுக்கும் மிகக் குறைந்த சிரமத்தைக் கொடுக்கும் விதத்தில் நகர்மயமாக் கலுக்கும்... தொழில்மயமாக்கலுக்கும் நிலத்தைக் கையப்படுத்தும் போக்கை மனிதாபிமான, மக்கள் பங்கேற்கும் ...வெளிப்படையான தன்மையினைக் கொண்டிருப்பதை உறுதிசெய்யும்; மேலும் உரிய நியாயமான இழப்பீட்டை வழங்கும் என்று நிலம் கையகப்படுத்தல், மறுவாழ்வு அளித்தல், மறுகுடிய மர்த்தல் மசோதா 2011(எல்.ஏ.ஆர்.ஆர். மசோதா–2011) தன்னை பறைசாற்றிக்கொள்கிறது. இது தற்போது இருந்துவரும் இந்தியாவின் நிலம் கையகப் படுத்தும் சட்டம் 1894ஐ திரும்பப்பெற்று வேறொன்றால் அதனை இடமாற்றம் செய்யவும் முயற்சிக்கிறது.

மேலும் மற்றொருபுறத்தில், இது மத்திய அல்லது மாநில அரசாங்கங்களின் நிலம் கையகப் படுத்துதலில் சம்பந்தப்பட்ட அனைத்தையும் உள்ளடக்குவதாகவும் எந்தவொரு மாநில அரசாங்கமும் இது தொடர்பாக வைத்திருக்கும் எந்த சட்டத்தையும் புறந்தள்ளுகிறது. சட்டமியற்றத் தேவையில்லை என்றும் கூறிக்கொள்கிறது. மேலும் இது, நிலம் கையகப்படுத்துதல் சம்பந்தமாக ஏற்கனவே இருந்துவரும் இந்தியச் சட்டத்தின் 16 சட்டங்களுக்குப் பொருந்தாது. எல்.ஏ.ஆர்.ஆர் 2011ல் நான்காவது தொகுதியில் பட்டியலிடப் பட்டுள்ளவற்றில் மேற்சொன்ன பிறவற்றோடு கீழ்காண்பவைகளும் இடம் பெற்றுள்ளன. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டம் 2005, தேசிய நெடுஞ்சாலை சட்டம் 1956, அணுசக்திச் சட்டம் 1962, நிலம் கையகப்படுத்தும் (சுரங்கம்) சட்டம் 1885, பெட்ரோலியம் மற்றும் கனிமங்கள் குழாய் வழி அமைத்தல் (நிலம் கையகப்படுத்தல் உரிமை) சட்டம் 1962, நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர் களை மறுகுடியமர்த்தல் (நிலம் கையகப்படுத்தும்) சட்டம் 1948, பாதுகாப்புச் சட்டம் 1903, இந்திய டிராம்வழி சட்டம் 1886, பழங்கால நினைவுச் சின்னங்கள் மற்றும் அகழ்வாய்வுகான நிலப்பகுதி பராமரித்தல் சட்டம் 1958 போன்றவையும் இன்ன பிறவும் அவற்றில் அடங்கும். நிலம் கையகப் படுத்துவது தொடர்பான முக்கியமான வழக்கு களின் பெரும்பகுதி மேற்சொன்ன சட்டங்களுக்குக் கீழ் வந்துவிட்டதென தெளிவாகின்றது. ஆக இவை இப்புதிய மசோதா 2011ன் கீழ்வராமல் விடப் பட்டுள்ளன. இதன் மூலம் (பலவழக்குகளில்) தப்பித்துக் கொள்ள வழிகளை அரசாங்கத்திற்கு இம்மசோதா ஏற்படுத்தி விடலாம்.

### நிலச்சொந்தக்காரர்களின் ஒப்புதல் அரசாங்கத்திற்கு தேவையில்லை, நிலம் கையகப்படுத்துவதற்கான பொது நோக்கத்தை தெளிவாக வரையறுக்கவும் இல்லை

நிலச்சொந்தக்காரரின் நிலம் அரசாங்கத்தி னால் அபகரிக்கப்படும் போது அவர் அதற்கு எதிராக கலெக்டரிடம் எழுத்துப்பூர்வமாக முறையீடு செய்யலாம் இறுதி முடிவு கலெக்டரால் எடுக்கப் படும் என்பதைத் தவிர, பிடித்துவைத்துக் கொள் வதற்காக, கட்டுப்படுத்துவதற்காக நிலத்தைக் கையகப்படுத்தும்போது நிலச் சொந்தக்காரர் களின் அனுமதியை கேட்க வேண்டிய அவசிய மில்லை என்று எல்.ஏ.ஆர்.ஆர் 2011 மசோதா சட்டமியற்ற நினைக்கின்றது. தனியார் திட்டங்களுக் காக நிலத்தை வழங்கும் இறுதி நோக்கத்துடன் அரசாங்கம் நிலத்தை கையகப்படுத்தும்போது 80 சதவீத மக்களின் ஒப்புதலைப் பெறுவதும், பொதுத் துறை தனியார் கூட்டு (PPP) திட்டங்களுக்கு நிலத்தைக் கையகப் படுத்துவதற்கு 70 சதவீத மக்களின் ஒப்பு தலைப் பெறுவதும் இம் மசோதாவின்படி கட்டாய மானதாகும். பொது நோக்கம் என்ற பெயரில் தான் இவை அனைத்தும் செய்யப்படும் இதில் பின்பு தேசிய பாதுகாப்பு, ஆயுதப்படை ஆகியவை முதல், சுகாதாரம் தொடர்பான இன்னபிறவும் இணைத்துக் கொள்ளப்படும். கல்வி, பொதுத் துறையின் கூட்டு (PPP) திட்டங்கள் தனியார் கம்பெனி திட்டங்கள் என்று கூறுகையில் "பொதுநோக்கம்" என்பதன் பொருள் 'பொதுநலனுக்கான சரக்கு களை உற்பத்தி செய்தல் அல்லது பொதுச் சேவைக் கான முகாந்திரங்கள்' என்று எடுத்துக் கொள்ளப் படுகின்றன. பொதுத்துறை தனியார் கூட்டு அல்லது தனியார் நிறுவனத் திட்டங்கள் அனைத்தும் இவ் வாறே கருதப்படுகின்றது. முதலில் பொதுநோக்கம் என்பதின் விளக்கம் முரண்பட்ட நிலைபாட்டைக் கொண்டிருப்பதுடன் குழப்பமாகவும், தெளி வின்றியும் பல்வேறுவிதமாக இதனை வியாக்கி யானம் செய்து கொள்வதற்கும் உள்நுழைப்பதற்கும் மறுதலிப்பதற்கும் ஏற்றவகையிலும் இதில் மிக அதிக வாய்ப்புகள் விடப்பட்டிருக்கின்றன. இது போக இத்தகைய பொதுநோக்கத் திட்டங்கள் பல எல்.ஏ.ஆர்.ஆர் மசோதா 2011 ல் நான்காவது பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்கனவே நிறை வேற்றப்பட்ட 16 சட்டங்களில் அடங்கியிருக்கிறது. எனவே இம் மசோதாவின் மூலம் இறுதியில் அரசாங்கம் செய்யப்போவதெல்லாம் தனியார் திட்டங்களுக்காகவோ அல்லது தனியார் திட்டங்களாகவே முடியப்போகின்ற பொதுத்துறை தனியார் கூட்டு (PPP) திட்டங்களுக்காகவோ நிலத்தை அபகரித்தலாகும். இங்குதான் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு ஒப்புதலைப் பெற வேண்டும் என்பது சட்டமாக்கப்பட்டிருக்கிறது. பகாசுர பலம்படைத்த தனியார் கம்பெனிகள் நிலங்களை வளைத்துப் போடும் வேலையில் இறங்க அரசாங்கம் அதற்கு உளப்பூர்வமாக உதவிகள் வழங்க, இந்த பணம்–அதிகாரம்–ஆள்பலம் படைத்தவர்கள் விவசாயி களின் ஒப்புதலை பெற வேண்டும் என்று சொல்வது கண்துடைப்பு நாடகமாகத்தான் இருக்கும். இறுதியாக ஆராய்ந்து பார்க்கிறபொழுது எல்.ஏ.ஆர்.ஆர். மசோதா –2011 என்பது விலை மதிப்பற்ற இந்த நாட்டின் நிலங்களை இந்த நாட்டின் ஏகபோகங்களுக்கும் இந்திய மற்றும் அன்னிய பன்னாட்டு நிறுவனங்களுக்கும் தாரைவார்ப்பதற் கான ஒரு பலமான முயற்சி என்பதாகவே நாம் கருதமுடியும்.

### சிங்கூர், நந்திகிராம் போராட்ட இயக்கங்களின் பின்னணி

இவ்வாறான மிக முக்கியமான வழிவகைகள் மற்றும் பிற ஓட்டைகளுடன் இந்த மசோதா மக்க ளிடையே பரவலக மிகப்பெரும் கவலையை ஏற் படுத்தியிருக்கிறது. இதை உணர்ந்துதான் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்திற்கு அடிபணிந்து சேவை செய்யும் பாராளுமன்ற அரசியல் கட்சிகள் தங்களின் வாக்குவங்கிக்குப் பாதகம் வந்துவிடாத வகையில் கவனத்துடன் மக்கள் சார்பு நிலைபாட்டினை எடுக்கிறார்கள். குறிப்பாக இந்த மசோதா குறித்த முக்கியத்துவம் மற்றும் இது பற்றிய சர்ச்சைகள் அனைத்தும் வரலாற்றுச் சிறப்புமிக்க மேற்கு வங்கத்தின் சிங்கூர் நந்திகிராம் போராட்ட இயக் கத்தின் பின்னணியில் எழுந்தவைகளேயாகும். இந்த இரண்டு இடங்களிலும் மக்களின் பாரம் பரியமான வாழிடங்களாக இருந்த வளம்மிகுந்த சாகுபடி நிலங்களை கொண்ட பகுதியிலிருந்து நிலம் கையகப்படுத்தல் சட்டம் 1894ன் படி சிங்கூரில் டாடா நானோ கார் உற்பத்தித் திட்டத்திற்கும், நந்திகிராமில் இந்தோனேசியாவின் பன்னாட்டு ஏகபோக சலீம் நிறுவனத்திற்காகவும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைக்க நிலங் களை பலவந்தமாக அன்றைய ஆளும் சி.பி.ஐ.(எம்) தலைமையிலான கூட்டணி அரசாங்கம் பறித்தது. இதற்கு எதிராக மிக உக்கிரமான மக்கள் போராட் டங்கள் எழுந்தன. இந்த இரண்டு இடங்களிலும் போராட்ட இயக்கங்கள் நமது கட்சியால் முனைப் போடு முன்னெடுத்து, காட்டுத் தீ போல் பரவி மாநிலம் முழுவதிலும் அனைத்துப்பகுதி மக்களிடை யேயும் குறிப்பாக மத்தியத்தர அறிவுஜீவி யினரிடையே முழு ஆதரவு பெற்றுப் பரவியது.

இது சி.பி.ஐ.(எம்) அரசாங்கத்தினால் மிக வெற்றிகரமாக உருவாக்கப்பட்டிருந்த போராட்ட இயக்கங்கள் இல்லாத மந்தமான நிலையை உடைத்து நொறுக்கியதுடன் வளர்ச்சி என்ற பெயரில் பல்வேறு சாக்குகளைச் சொல்லிக் கொண்டு விவசாயிகளின் நிலங்களை ஈவிரக்க மின்றி பறிக்கும் நாடு முழுவதிலும் இருந்துவந்த நடைமுறையை உலுக்கியது. நாம் மேலே குறிப் பிட்டதைப்போல இந்த விவசாயிகளின் அடி பணியாத எதிர்ப்பு பொதுவாக பிறபகுதி விவசாயி களிடத்திலும் பாடுபடும் மக்களிடத்திலும் ஒரு புதிய விழிப்புணர்ச்சியையும் உத்வேகத்தினையும் மேற்கு வங்கத்தில் மட்டுமின்றி தேசம் முழுவதிலும் விதைத்தது. இதுநாள் வரையில் பாடுபடும் விவ சாயிகள் மௌனமாகவும் அடக்கத்துடனும் அவர்களின் ஒரே வாழ்வாதாரமாக இருந்த நிலத்தை இழக்க வேண்டியிருந்தது. அதைத்தான் அவர்கள் செய்துவந்தார்கள். ஈவிரக்கமின்றி நில முதலைகளுக் காகவும் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு ஏகபோகங்களுக்கு ஆதரவாகச் செயல்படும் அரசு மற்றும் அரசாங்கத்தின் காட்டுமிராண்டித்தனமான காவல் படைகளுக்கு முன்பாக ஆதரவற்ற நிலையில், அணி திரட்டப்படாத அவர்கள் நிற்க வேண்டி யிருந்தது. ஆனால் அவர்கள், இந்த அரசாங்கம்–நிலமுதலைகள்–கார்ப்பொரேட் மற்றும் அவர்களை அண்டிப் பிழைக்கும் சமூகவிரோதக் கும்பல் என்ற கூட்டணிக் கெதிராக அவர்களின் விருப்பங்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராக போராடுவது அல்லது செத்துமடிவது என்ற உறுதி யான எதிர்ப்பு நிலையெடுத்து தங்களை தைரியத்தோடு அணிதிரட்டிக் கொள்ள வேண்டும் என்ற ஒரு புதிய கருத்தால் உணர்வூட்டப்பட்டார்கள். அதன்பின்பு கேட் பாரற்ற வகையில் நிலமுதலைகள்– கார்ப்பொரேட் நிறுவனங்களின் சொந்தவசதி வாய்ப்புகளுக்காகவும் ஆடம்பரங்களுக்கும் வழியமைத்திட விவசாயிகளை நிர்கதியற்ற நிலைக்குத் தள்ளி அவர்களின் மீதும் அவர்களின் நிலங்களின் மீதும் இதற்கு முன்புவரை தொடுக்கப்பட்டு வந்த அடக்குமுறை சற்று ஆட்டம் கண்டது. தங்களின் கண்முன்னே நிலைமைகள் விரைந்து மாறுவதைக் கண்டு தங்களின் உண்மை யான நோக்கத்தினை மறைத்து புதிய திட்டத்தைக் கொண்டு மக்களையும் விவசாயிகளையும் ஏமாற்ற விரும்பினார்கள். ஆகவே அரசாங்கம் ஒரு சில செய்தி ஊடகங்களுடன் இணைந்து கொண்டு ஒரு புதிய சட்ட மசோதாவை நிறைவேற்ற வேண்டு மென்று கூச்சலிட்டது. இது, எதிர்ப்பு இயக்கங் களுக்கும் தடுப்புக்கும் மற்றும் எவ்வித உடன் பாட்டிற்கும் கூட வழியின்றி பலவந்தமாக நிலங் களைக் கையகப்படுத்த வழியமைத்தது. ஆனால் ஆட்சியாளர்கள் மூடர்கள் அல்ல. அவர்கள் நாடு முழுவதிலும் நிலத்தை இழந்த மக்களிடமிருந்து எழும் பலமான எதிர்ப்பு அபிப்பிராயம் குறித்தும் நன்கு அறிந்திருந்தார்கள். எனவே புனர்வாழ் வளித்தல் மற்றும் மறுகுடியமர்த்தல் போன்ற சொற் பதங்கள் மசோதாவின் தலைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டன, இழப்பீடு மற்றும் பொது நோக்கத்திற்காகக் கையகப்படுத்துதல் போன்ற பதங்கள் மசோதாவின் உள்ளடக்கத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டன. இந்த அனைத்து வார்த்தை ஜாலங்களும் மக்களை ஏமாற்றுவதற் காகத்தான். இருப்பினும் கூட அவர்களால் பாராளு மன்றத்தில் இம் மசோதாவை சுலபமாக நகர்த்திட முடியவில்லை நந்திகிராம் சிங்கூர் இயக்கங்களி

தொடர்ச்சி 3ம் பக்கம்

## எல் ஏ ஆர் ஆர் மசோதா 2011

# ஒவ்வொரு அம்சத்திலும் முரண்பட்டதாகவும் ஏமாற்றுவதாகவும் இருப்பது நிரூபணமாகிறது

*2ம் பக்கம் தொடர்ச்சி*

லிருந்தும் அதற்குப்பிந்தய காலங்களிலும் எழுந்த மக்கள் அபிப்பிராயம் தனது வாக்கு வங்கிக்கு ஆபத்து வந்துவிடும் என்ற பயத்தில் பாராளுமன்ற அரசியல் கட்சிகளை மேலும் மேலும் சிந்திக்க வைத்தது. அரசாங்கம் இன்றுவரையில் அரசாங்கம் இந்த மசோதாகுறித்த அதன் நிலையை இப்படியும் அப்படியுமாக தள்ளிப்போட்டும் வருகிறது.

### நிலத்தை கையகப்படுத்த முன்வைக்கப்படும் ஏமாற்று மற்றும் தவறான வாதங்கள்

ஆளும் வர்க்கத்தின் மற்றும் அவர்களுக்கு அடிபணிந்து சேவை செய்யும் அரசியல் கட்சிகளின் உள்நோக்கம் கொண்ட இத்திட்டத்தை அம்பலப்படுத்திட, பலவந்தமாக நிலம் கையகப்படுத்தப்படுவதற்கு ஆதரவானவர்கள் கட்டவிழ்த்துவிடும் வாதங்கள் குறித்து நாம் பலமுறை விரிவாக விவாதித்திருக்கிறோம். அவர்களின் வாதங்கள் இவ்வாறாக நீள்கிறது:– தொழிற்துறை, விவசாயம், பொருளாதாரம் இவற்றின் அபிவிருத்திக்கு இந்தியாவில் தொழில்மயமாக்கல் அவசியமாகும். தொழில் முதலாளிகள் பணம்சம்பாதிப்பதற்காக (லாபம் சம்பாதிப்பதற்காக) தொழில் நிறுவனத்தைத் தொடங்குகிறார்கள். ஆகவே அவர்கள் அவர்களின் தொழில் திட்டத்திற்கு ஏற்றவகையில் இடங்களைத் தேர்வு செய்வார்கள். அவர்களுக்கு அது லாபம் தருவதாகவும் போக்குவரத்துத் தேவைகளுக்கு உகந்த வகையிலும் சந்தைத் தேவையினை நிறைவுசெய்யும் பொருட்டும் அமைய வேண்டும். அவ்வாறான இடங்கள் வளம்மிகுந்த சாகுபடி நிலங்களாக இருக்கலாம். இருப்பினும் தொழிற்சாலை உற்பத்திப் பொருட்களிலிருந்து பெறப்படும் லாபம் விவசாய உற்பத்திப் பொருட்களிலிருந்து பெறப்படும் லாபத்தை விட பல மடங்கு அதிகமாகும். ஆகவே மக்கள் தொழிற்சாலைக்கு வழிவிடவேண்டும். ஆகவே தொழிற்சாலை என்பது சௌகரியமானதாகவும் அனைவரையும் உள்ளிழுத்துக் கொள்ளும்படியும் இருந்திடல் வேண்டும். மக்கள் நிலங்களை இழப்பதால் அவர்களுக்குத் தற்போது இருந்துவரும் நிலமதிப்பைவிடவும் உயர்விகிதத்தில் இழப்பீடு வழங்கப்பட வேண்டும். நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் புதிதாக உருவாக்கப்படும் தொழிற்கூடங்களில் பணியமர்தப்படலாம் அல்லது மாற்று வேலைவாய்ப்பினைத் தேடலாம்.

### தொழில்மயமாக்கல் என்ற ஏமாற்று, மனிதத் தன்மை வாய்ந்த மசோதா என்ற ஏமாற்று

நமது விவாதத்தில் இவைபோன்ற வாதங்கள் எவ்வளவு அப்பட்டமான ஏமாற்றும் தன்மை கொண்டன என்று முன்பே பலமுறை சுட்டிக் காண்பித்திருக்கிறோம். மான்செஸ்டர், முனிக், பீட்ஸ்பார்க், ஷாங்காய் மற்றும் பிற பிரபலமான மிகப்பெரும் தொழில் மையங்கள் பெரும்பாலும் சாகுபடி நிலங்களில் தான் வளர்ச்சியடைந்தன என்று விவசாய நிலங்கள் பறிக்கப்படுவதை ஆதரிக்கும் நோபல் பரிசு பெற்ற அமர்த்தியாசென் அவர்கள் பிரஸ்தாபிக்க நேர்ந்தபோது அவ்வாறான சூழ்நிலைமை தற்போது இல்லை என்பதை நாம் தெளிவுபடுத்தினோம். நூற்றாண்டுகளுக்கு முந்திய அந்தநாட்களில் முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவத்தின் தடைகளை உடைத்து வளர்ந்துவரும் நிலையில் இருந்தது. தற்போது, முழு முதலாளித்துவ உலகும் தீவிரமான பொருளாதாரப் பின்னடைவினால் (வீழ்ச்சி) பீடிக்கப்பட்டிருக்கிறது. இன்று உற்பத்தித் தொழிற்கூடங்கள் உள்ளிட்ட பொருளாதாரத் துறையின் அனைத்து தொழிற் பிரிவுகளிலும் தேக்கநிலை நீடிக்கிறது. மீள்வதற்கான வாய்ப்புகள் காணல்நீர் போல வந்து வந்து மறைகின்றன. முழு முதலாளித்துவப் பொருளாதாரமும் ஊகவாணிபம் என்ற சூதாட்டத்தில் உயிர்பிழைத்திருப்பதைப் போன்று தெரிகிறது. மற்ற பிற முதலாளித்துவ நாடுகளைப் போலவே இந்தியாவிலும் கூட ஆலைகளும் தொழிற்சாலைகளும் சிறியதும் பெரியதுமாக ஆயிரக்கணக்கில் ஒன்றுக்குப் பின் ஒன்றாக மூடப்பட்டு வருகின்றன. மக்கள் பணத்தில் இயங்கும் அரசுத்துறை நிறுவனங்கள் தனியார் முதலீட்டாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கம் மற்றும் தனியார்களின் இங்கும் அங்குமான சில சிறிய அளவிலான முயற்சிகள் தவிர்த்து புதிய தொழிற்சாலைகளை நிறுவும் எந்த சிரத்தைகொண்ட நடவடிக்கைகளும் இவர்களால் மேற்கொள்ளப்படவில்லை. மிகத் தெள்ளத் தெளிவாக தொழிற் சாலைகளில் வேலை வாய்ப்பு பெருகுவது கேள்விக்கு அப்பாற்பட்ட விஷயமாகிவிட்டது. இன்றைய 'வேலை வாய்ப்பற்ற வளர்ச்சியில்' இங்கும் அங்கும் மிகக் குறைந்த எண்ணிக்கையில் உருவாகும் புதிய தொழிற்சாலைகளும் பிரத்யேகமாக உயர்தொழில்நுட்ப, மூலதன–நலன்மட்டுமே கொண்டவைகளாக இருக்கின்றன. இவைகள் பரந்துபட்ட அளவில் வேலைவாய்ப்பினை வழங்காது. தொழில்நுட்ப ரீதியில் பின்தங்கிய நிலையில் இருக்கும் விவசாயப் பகுதியினருக்கு இந்த உயர்தொழில்நுட்ப தொழிற்சாலைகளில் தருவதாகச் சொல்லப்படும் வேலைவாய்ப்பு உத்திர வாதங்கள் அடிப்படையில் மக்களை ஏமாற்றுவதாகும். இந்த மசோதாவில் குறிப்பிடப்படும் 'பாதிக்கப்பட்டவர்கள் வளர்ச்சியில் பங்காளர்களாவார்கள்' என்ற போலியான விருப்பம் உண்மையில் போலியான விருப்பமே என்பது மட்டுமல்லாமல் கொடுமையான கேலிக்குரிய விஷயமுமாகும். நிலத்தை இழந்த ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு நபருக்கு வேலை வழங்கப்படுவதாக வைத்துக்கொண்டால் அந்தப் பெரிய குடும்பத்தில் உள்ள பிற உறுப்பினர்கள் அவர்களின் வாழ்வாதாரத்தையும் வேலையையும் இழப்பார்கள். அதே போல் ஏற்கனவே இலட்சக்கணக்கான இளைஞர்கள் சுயவேலைவாய்ப்பில் தங்களின் அதிர்ஷ்டத்தைத் தேடிக் கொண்டிருக்க அவர்கள் நிச்சயமற்ற எதிர்காலத்தினால் துரத்தப்பட்டு அவர்கள் தொழில் தொடங்க வாங்கிய கடனைக்கூட திருப்பிச்செலுத்தத் தவறி சட்டரீதியிலான பறிமுதல் நடவடிக்ககைகளைச் சந்தித்துக் கொண்டிருக்க, மாற்று வேலைகளைத் தேடிக் கொள்ள வேண்டும் என்ற அறிவுரையும் கூட இங்கே மண்ணைக் கவ்வுகிறது.

மேலும் பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களும், ஊழியர்களும் இந்த உலகமய சந்தைப் பொருளாதார காலகட்டத்தில் தங்களின் வேலைகளை இழந்து கொண்டிருக்கிறார்கள் ஏற்கனவே இழந்தும் விட்டார்கள். ஏற்கனவே தள்ளாட்டம் போடும் வேலையில்லாப் பட்டாளத்தின் எண்ணிக்கையைக் இவர்கள் கூட்டுவார்கள். மேலும் இவர்களோடு புதிதாக வேலையிழப்பவர்கள் எண்ணிக்கையும் சேர்ந்துகொள்ள கொடிய வறுமை அதிகரிக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக குட்டிப்பூர்ஷுவா மற்றும் சமூக ஜனநாயகக் கட்சிகள் அவை எவையானாலும் அவற்றால் வெட்கமின்றி ஆதரிக்கப்படும் ஏகபோக ஆதரவுக் கொள்கைகளால் துணை செய்யப்பட்டும் ஆதரிக்கப்பட்டும் வருகின்ற ஏகபோகங்களின் தீராத லாபப்பசியே விலைவாசி உயர்விற்கு மிகமுக்கியக் காரணமாகும். இது ஏற்கனவே சுரண்டலாலும், ஏழ்மையாலும் வறுமையில் ஆழ்த்தப்பட்டுள்ள மக்களின் வாங்கும் சக்தியை மேலும் குறைக்கிறது. இவ்வாறு பரந்துபட்ட மக்களின் வாங்கும்சக்தி குறைந்துவருவது சந்தை நெருக்கடிக்கும் அதன் தொடர்சியாக தொழிற்துறை மந்தத்திற்கும் ஆலை மூடலுக்கும் உற்பத்திப் பொருள் தேக்கத்திற்கும் இட்டுச்சென்று இந்த விஷச் சுழற்சி தொடர்கிறது. நாம் பலமுறை சுட்டிக் காட்டியதுபோல் தற்போதும் இந்த மசோதா நிறைவேற்றப்படும்பொழுது இது மீண்டும் தொடர்ந்து நிகழும். சந்தைப்பொருளாதார மற்றும் முதலாளித்துவத்தின் ஆதரவாளர்கள் என்னதான் பெருமை பேசினாலும் புள்ளிவிவரக் கணக்குகளில் ஏழைகளின் எண்ணிக்கையை குறைத்துக்காட்ட அவர்கள் என்னதான் பிரயத்தனம் செய்தாலும், பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விரைவிலேயே மீண்டுவிடுவோம் என்று ஆரூடம் சொன்னாலும்கூட மேற்குறிப்பிட்ட விஷச்சுழற்சி நடந்தே தீரும். இதுதான் யதார்த்தம். இந்த யதார்த்த நிலைமையில், தொழில்மயமாக்கல் அல்லது வளர்ச்சி என்றபெயரில் அநேகமாக வந்து கொண்டிருப்பது ஏகபோகவாதிகள் மற்றும் ஆடம்பரத்தை விரும்புகின்ற மேட்டுக் குடியினரின் வசதி வாய்ப்புகளுடன் தொடர்புடைய ரியல்எஸ்டேட் வியாபாரம்தான் மற்றும் அதனுடன் தொடர்புடைய வசதிகளாகும். வேலையின்றி, வீடின்றி, நிலமின்றி நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட விவசாயிகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் இந்த மேட்டுக் குடியினரின் ஆடம்பர பங்களாக்களில் வீட்டுவேலைகளிலும் பல சில்லரை வேலைகளிலும் ஈடுபடுத்தப்படலாம் அல்லது சிலர் தங்களின் குடும்பத்தில் ஒருவராகபாவித்து உழுது பயிரிட்டு அன்போடு பராமரித்த நிலத்தில் உருவாக்கப்பட்ட ரியல் எஸ்டேட்டுகளில் சில சில்லைரை வேலைகளைப் பெறலாம். தொழில்மயப்படுத்துவதற்கும் வளர்ச்சிக்கும் தான் நிலங்களை கைப்பற்றுகிறோம் என்ற கோஷம் அவர்களின் உண்மையான நோக்கத்தினையும் நடவடிக்கைகளையும் மறைப்பதற்கான ஒரு முகத்திரையும் மக்களை ஏமாற்றுவதற்கான தந்திரமுமே ஆகும். எல்.ஏ.ஆர்.ஆர் மசோதா 2011 புதிய மசோதாவும் கூட இதே 'தொழில்மயமாக்கல்' 'நகர்மயமாக்கல்' என்ற போலியான காரணங்களைக் கூறும் போக்கினையே தொடரப் போவதாக முன்மொழிகிறது. மேலும் இது, ஏழை நிலச்சொந்தக்காரர்களின் ஒப்புதலின்றி ஏதேச்சதிகாரமாக நடவடிக்கைகளைத் தொடர அரசாங்கத்திற்கு அதிகாரத்தையும் வழங்குகிறது. இருக்கின்ற நிலத்தையெல்லாம் பறித்து பன்னாட்டுக் கம்பெனிகளுக்கும் ஏகபோகவாதிகளுக்கும் மற்றும் பணம் படைத்தவர்களுக்கும் வழங்குவதற்கும் அதிகாரம் வழங்குகிறது. நிலச் சொந்தக்காரர்களின் ஒப்புதலைப் பெற வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆனால் அதிகாரம் படைத்த கார்ப்பொரேட், பன்னாட்டு கம்பெனிகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஏகபோகவாதிகள் தங்களுக்கு அனைத்து அம்சங்களிலும் துணைபுரியும் அரசாங்கத்தின் ஆதரவோடு பாதிக்கப்படும் அணிதிரட்டப்படாத நிராதரவான ஏழை மக்களின் நெற்றியில் துப்பாக்கியைக் வைத்து மிரட்டத்தக்க தங்களின் பண, அடியாள் பலம், நிர்வாக பலத்தினைக் கொண்ட இவர்கள் 80 சதமானவர்களிடமோ 100சதமானவர்களிடமோ ஒப்புதலைப்பெறவேண்டும் என்ற கேள்வி அர்த்தமற்றதும் ஏமாற்றுத்தன்மை கொண்டதுமாகும். ஆகவே அரசாங்மே கொள்ளையடிக்கும் தொழிலைச் செய்கிறது. விவசாயிகள் தனியார் நிலமுதலாளிகளின் பீரங்கிக்கு இரையாவதற்கு தள்ளுகிறது. இந்த மசோதா எந்தஅளவிற்கு 'மனிதன்மையோடு செயலாற்றல்' 'அனைவரையும் ஈடுபடுத்தல்' 'வெளிப்படைத்தன்மையைப் பராமரித்தல்' என்ற முறைமைகளைக் கைக்கொள்கிறது என்பதை மக்கள் தீர்மானிக்கட்டும்!

உண்மையிலேயே அரசாங்கம் நேர்மையோடு தொழில் தொடங்க விரும்பியிருந்தால், ஏகபோகவாதிகள் இதில் மிகச் சிரத்தையோடு இருந்திருந்தால் பயன்பாட்டிலில்லாத, தரிசு நிலப்பகுதிகளில் தொழிற்சாலைகளை நிறுவலாம்.

சிறிய எண்ணிக்கையிலான தொழிற் சாலைகளுக்கும் கூட அவர்கள் விவசாயத்திற்கு பயன்படாத தரிசுநிலப் பகுதியிலோஅல்லது ஏற்கனவே அதிக அளவில் பரந்துகிடக்கின்ற மூடப்பட்ட தொழிற்சாலைகள் உள்ள பகுதிகளிலோ இடங்களைத் தேர்வு செய்திருக்கலாம்; தொடங்கியிருக்கலாம். அவர்கள் சொல்லுகின்ற 'தொழிற்சாலைக்குரிய வசதி மற்றும் சௌகரியங்கள்' என்ற பிரச்சினை குறித்த கேள்வி என்பது இங்கே அடிப்படையற்றது. ஏனெனில், தகவல் தொழில்நுட்பமும் போக்குவரத்தும் வளர்சியடைந்த இக்காலகட்டத்தில் அவ்வசதிகளை தரிசுநிலத்தில் கூட ஏற்படுத்திக் கொள்வது என்பது எளிதானதே. அதனைச் செய்வதற்கு வேண்டியதெல்லாம் சிரத்ததையுடன்கூடிய முன்முயற்சி மட்டுமே. ஆனால் அம்மாதிரியான முயற்சிகள் எடுத்தால் பெரும் எண்ணிக்கையில் விவசாய மக்களை நிலத்திலிருந்து விரட்டவோ அல்லது செழுமைமிக்க விவசாய நிலங்களை இழக்கவோ வேண்டிய அவசியமில்லை.

### இழப்பீடு என்ற பெயரில் ஏமாற்று

இந்த மசோதா, விவசாயிகள் விரட்டப்படுவதையும் செழுமைமிக்க நிலங்கள் பறிக்கப்படுவதையும் நிவாரணங்களின் மூலம் சரிசெய்துவிட முயற்சிக்கிறது. முதலில், வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகளும் முகாந்திரங்களும் ஒவ்வொரு நாளும் சுருங்கி குறைந்தபட்ச வேலைப்பாதுகாப்பையும் இழந்து கொண்டிருக்கின்ற இக்காலத்தில் நிலம் கையகப்படுத்தல், வளம்மிகுந்த சாகுபடி நிலங்களை இழத்தல், மக்களை வேரோடு பிடிங்கி எறிதல், இவற்றை நிவாரணத் தொகை மூலம் சரிகட்டிவிடலாம் என்ற அணுகுமுறை ஆகியவை குறித்துச்

*தொடர்ச்சி 4ம் பக்கம்*

## எல் ஏ ஆர் ஆர் மசோதா 2011

# நாட்டின் உணவுப் பாதுகாப்பை சீர்குலைக்கும்

3ம் பக்கம் தொடர்ச்சி

விவாதிக்கவேண்டும். பிரச்சினையைப் பார்ப்பது குறித்துச் சொல்லப்பட வேண்டும். வேலைவாய்ப்பு உருவாக்கம் குறித்த காட்சி ஏற்கனவே மிக பரிதாபத்திற்குரிய நிலையிலிருக்கிறது. விரைவாகவும் மிக அதிக அளவிலும் உயர்ந்துவரும் விலைவாசி மற்றும் அதன் தொடர்விளைவாக அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவினங்கள், இவையனைத்தும் எப்படிப்பட்ட பெருந்தொகை இழப்பீடாகக் கொடுத்தாலும் அதனை மிக விரைவில் கரைந்துபோகச் செய்துவிடும். கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு சந்தைவிலைக்கு மேல் விலைநிர்ணயம் செய்து கொடுக்கப்படவேண்டுமென்றும் புனர்வாழ்விற்கான தொகையும் கொடுக்கப்படவேண்டுமென்றும் சட்ட நிபந்தனை விதித்து விவசாயிகளுக்கு ஆதரவு காட்டுவதைப்போல் இந்த மசோதா பாவனை காட்டுகிறது. வறிய நிலையிலிருக்கின்ற ஒரு ஏழைக் குடும்பத்திற்கு இவர்கள் தரும் இந்தத் தொகை ஒன்றுக்கும் உதவாத தொகையாக மாறுவதற்கு எவ்வளவு காலமெடுக்கப் போகிறது. ஆனால் அதே நேரத்தில் இந்த நிலத்தை தொழிற்சாலைக்காக மாற்றுகிறபோது சந்தை விலையைக் காட்டிலும் எவ்வளவு பலமடங்கு அதிகமான தொகையினை இந்த பன்னாட்டு நிறுவனங்களும் ஏகபோகவாதிகளும் லாபமாகப் பெறுவார்கள்? அப்படியானால் விவசாயநிலம் வியாபாரத்திற்காக மாற்றப்படுகிறபோது அந்த நிலம்அடையும் பல மடங்கு மதிப்புயர்வில் நிலத்தை இழந்தவனுக்கும் நியாயமான உரிமை இருக்கவேண்டுமல்லவா? அப்படியானால் இழப்பீட்டையும் கருணைத் தொகையையும் முடிவுசெய்கிறபோது, இந்த சொத்துரிமை நிர்வாகத்தினர் இந்த உரிமையினை நிலச்சொந்தக்காரருக்கு மறுப்பதில் என்ன நியாயமிருக்கிறது?

மேலும், பெரும் எண்ணிக்கையிலான நிலச்சொந்தக்காரர்கள் ‘நிலச் சொந்தக்காரர்கள் என்று வரையறுக்கப் பட்டவர்கள் தவிர’ தங்களின் நிலத்தின் மீதான உரிமையினை சட்டரீதியாக நிறுவிக்கொள்ள ஆவணங்கள் ஏதும் இல்லை. பாரம்பரியமாக அனுபவத்தின் பெயரில் ஆண்டாண்டுகளாக தங்களுக்குரிய உரிமையைக் பாராமரித்து வருகிறார்கள். அவர்கள் எந்தவித இழப்பீடும் பெறுவதிலிருந்து விலக்கிவைக்கப்படும் நிலையில் இருப்பார்கள். சட்டரீதியான ஆவணங்கள் இருக்கிறதோ இல்லையோ இங்கே பிரதானமான கேள்வி அவர்கள் தரும் இழப்பீடு எவ்வளவு தூரம் அவர்களுக்கு நேர்ந்த நில இழப்பை ஈடுசெய்யும் என்பதுதான். மேலும் ‘நிலச் சொந்தக்காரர்கள் என்று வரையறுக்கப் பட்டவர்கள் தவிர’ மிகப்பெரும் எண்ணிக்கையில் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், குத்தகை விவசாயிகள் மற்றும் நிலத்துடனும் விவசாயத்துடனும் சம்பந்தப்பட்ட மற்றவர்கள் எல்.ஏ.ஆர்.ஆர் **2011** மசோதாவில் 'பிற பாதிக்கப்பட்ட குடும்பங்கள்' என்ற வரையறுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எந்த இழப்பீடு திட்டங்களுக்குள்ளும் கொண்டுவரப்படாமல் மிகவசதியாக தவிர்க்க வாய்ப்புள்ளது. இழப்பீடுவழங்கி நிலத்தை கையகப்படுத்தியபின்பு அவர்கள் நிலமற்று வேலையின்றி வீடின்றி விடப்படுவார்கள். அவர்களின் குடும்பங்களுக்கான புனரமைப்பு மற்றும் மறுகுடியமர்த்தல் என்பதெல்லாம் எப்படி நடக்கும் என்பதை யதார்த்தத்தை அறிந்தவர்கள் நன்றாகவே புரிந்து கொள்வார்கள். அனைவருக்கும் இல்லை யென்றாலும் கூட பெரும்பாலான நபர்களுக்கு இந்த புனரமைப்பு மற்றும் மறுகுடியமர்த்தல் நடவடிக்கைகளில் – அதிகார வர்க்கத்தினர் மற்றும் சட்டத்துறை அதிகாரிகள் நிலம் கையகப்படுத்தும் கூட்டத்துடன் மறைமுகமாக கைகோர்த்துக் கொண்டு ஆயிரத்தியொரு தடைகளையும் முட்டுக்கட்டைகளையும் விதித்து இறுதியாக விவசாயிகளை வெட்டவெளியில் அனாதைகளாகத் தள்ளிவிட்டு அதற்கு அவர்களின் தலைவிதியைக் காரணம் சொல்லிவிட்டு இந்தியா உலக நாடுகளுக்கு இணையாக வளர்கிறது பாருங்கள்! என்று கொண்டாட்டம் போடுவார்கள்.

ஆனால் உணர்ந்துகொள்ளப்படவேண்டிய மிக முக்கியமான விஷயம் என்னவெனில் : நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் நிலம் என்பது நிரந்தரமான சொத்து. அது குடும்பத்தைச் சேர்ந்த சில விவசாயிகளுக்கு உணவளிப்பது மட்டுமல்ல, தலைமுறை தலைமுறையாக அவர்களின் சொந்த குடும்பத்திற்கே உணவளிக்கிறது. அவ்வாறிருக்க அதிகாரத்திலும், எதிர்கட்சியாகவும் இருக்கும் ஆளும் முதலாளித்துவவாதிகள் மற்றும் அவர்களின் அடிவருடிகள் மற்றும் அவர்களுக்கு சேவகம் செய்யும் அரசியல்வாதிகள் நிலத்தின் மீதான மக்களின் இந்த நிரந்தரச் சொத்துரிமையை மறுக்கும் உரிமையை எங்கிருந்து பெற்றார்கள்? அவர்கள் கருணை உள்ளம் கொண்டவர்களாக நடிக்கிறார்கள். மக்களை வெளியேற்றுகிறார்கள் பின்பு இழப்பிடு வழங்குகிறார்கள். அரசாங்கமோ அல்லது கம்பெனியோ யாருக்கு இழப்பீடு வழங்குகிறது? ஒரு தலைமுறையின் சில தனிநபர்களுக்கு அப்படியானால் அடுத்தடுத்த தலைமுறைகளின் கதி என்ன? நிலத்தை கையகப்படுத்துவதற்கு எவ்வளவு சதவிகித மக்களின் ஒப்புதல் அவசியம் என்பது குறித்தும் அல்லது எவ்வளவு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்பது குறித்தும் விவாதங்களைக் கிளப்பிவிடுகின்ற அரசியல் கட்சிகளும் பிற அமைப்புகளும்இருக்கின்றன. ஆனால் நாம் மேலே சுட்டிக்காண்பித்திருக்கின்ற விஷயங்கள் இந்த வாதங்கள் எந்த அளவிற்கு பொறுத்தமற்றவை நியாயமற்றவை என்பதனை தெளிவுபடுத்திடும்.

### உணவு பாதுகாப்பு குறித்த கேள்வி

அதாவது இந்த நில கையகப்படுத்தும் சட்ட மசோதாவிற்கு ஆதரவாகப் பேசுகிறவர்கள் மற்றும் இதற்கு ஒத்திசைவாகத் தம்பட்டமடிக்கின்ற ஒரு பகுதி ஊடகங்கள் மிக கவனத்துடன் உணவு உற்பத்தியில் தன்னிறைவு மற்றும் உணவு பாதுகாப்பு குறித்த பிரச்சினையை தவிர்த்துவிடுகிறார்கள். உணவு உற்பத்தியில் தன்னிறைவு என்பது ஒரு நாட்டிற்கு எவ்வளவு அவசியம் மற்றும் இதனை அளந்தறிவது எப்படி? ஒரு நாடு எந்த அளவிற்கு எல்லா விஷயங்களிலும் தன்னிறைவோடும் சுயசார்போடும் இருக்கிறதோ அந்த அளவிற்கு அது அரசியல் ரீதியாகவும் நிதி ரீதியாவும் நிலைத்தன்மையோடிருக்கும். இது அதன் வளர்ச்சி குறித்த ஒரு அளவுகோல்களில் ஒன்றாகும். மற்ற பிற விஷயங்களைவிடவும் உணவு உற்பத்தியில் தன்னிறைவு மற்றும் சுயசார்பு என்பது மிக முதன்மையான இடத்தை வகிக்கிறது. இந்தியாவில் மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் எவ்வித வாங்கும் சக்தியுமின்றி ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவைக்கூட பெற முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆகவே உணவில் தன்னிறைவு என்பதற்கு ஒரு நாடு தன் நாட்டிலுள்ள அனைவரின் அதாவது தங்களுக்கான உணவை தாங்களாகவே தேடிக்கொள்ள முடியாதவர்களாய் இருப்பவர்கள் உள்ளிட்ட ஒவ்வொருவரின் உணவுத் தேவையினையும் நிறைவேற்றக் கூடியதாய் இருக்கவேண்டும் என்பதுதான் அர்த்தமாகும். இந்தியா பல்வேறுபட்ட பரந்துபட்ட நிலப்பகுதியினையும் மற்றும் தட்ப வெப்பநிலையினையும், உணவு உற்பத்திக்கு அவசியமான அனைத்து காரணிகளையும் மிக உயர்ந்த அளவில் பெற்றதாக இருப்பதால் ஒவ்வொரு இந்தியனும் இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவையும் சுயசார்பையும் பெற்று வளர வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயற்கைதான். ஆனால் யதார்த்தம் கொடுமையானதாக இருக்கிறது. முதலாவதாக, நாம் குறிப்பிட்டபடி தன்நிறைவோடு இருக்கிறதோ இல்லையோ ஆனால் நாட்டு மக்களில் பெரும்பான்மையினர் ஒரு வேளைச் சோற்றுக்கும் வழியின்றி தவித்துவருகிறார்கள். பட்டினிச் சாவுகள் இன்றும் மக்கள் வாழ்க்கையினை வேட்டையாடுகிறது. ஆகவே மக்களின் உணவுத் தேவை என்பது இன்னும் மிகச்சரியான முறையில் நிறைவேற்றப்படவில்லை. இரண்டாவதாக **1990** களுக்குப்பின்பு மேன்மேலும் விவசாய உற்பத்திவளர்ச்சி திகிலூட்டும் வகையில் குறைந்திருக்கிறது. (உதாரணத்திற்கு **2009**ல் பிரதமர் அவர்களே ஒரு பத்திரிகைக்கு அளித்த நேர்காணலில் இவ்வாறு ஒத்துக் கொண்டார்) அதாவது, இந்தியாவின் வெகுசில மாநிலங்கள் மிகக் குறைந்த விவசாய உற்பத்தி விகிதத்ததைப் பதிவு செய்திருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், எதிர்மறையான வளர்ச்சியைக்கூட பதிவு செய்திருக்கின்றன. மூன்றாவதாக இந்த சரிவுகளுக்கான காரணங்களில் முதன்மையாக நிற்பது விவசாய சாகுபடி நிலங்கள் இழக்கப்பட்டதுதான். மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டிருப்பதன் காரணமாக உணவு உற்பத்திக்கு ஆதாரமாக இருக்கின்ற நிலங்களின் தேவையும் கூட அதிகரிக்கிறது. மேலும் மேலும் விவசாய நிலங்கள் இழக்கப்படுவது என்பது நிச்சயம் எதிர்காலத்தில் உணவு உற்பத்திச் சூழலை மிக மோசமாகப் பாதிக்கும். இந்த உண்மையை ஒத்துக்கொள்ளாமல், மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் வறட்சியையும் மோசமான பருவ நிலைமாற்றத்தையும் முக்கிய காரணமாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. நான்காவதாக, நவீன முன்னேறிய தொழில்நுட்பத்தின் பயன்பாடு நில வளத்தை அதிகரிக்க உதவுவதுடன் உற்பத்தித் திறனையும் கூட்டி ஒரே நிலத்தில் பல்–பயிர்ச் சாகுபடியையும் சாத்தியமாக்குகிறது என்று பெருமையாக சொல்லப்படுகிறது. ஆனால் செயற்கை உரங்களால் நிலத்தை அதிக அளவில் தொடர்ந்து பண்படுத்திடும்போது, காலப்போக்கில் நிலத்தின் உற்பத்தித்திறன் வீழ்ச்சியுறுகிறது என்று ஏற்கனவே செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தகைய சூழ்நிலைமையில் அரசாங்கத்தின் இம்மாதிரியான அணுகுமுறைகளால் நாட்டு மக்களின் உணவுப்பாதுகாப்பு நூலிழையில் தொக்கி நிற்கிறது. ஆனால் உணவுபாதுகாப்பை கட்டிக் காக்கும் கேள்வியில் மசோதா–**2011** அதன் சட்ட ஷரத்து **10**ல் 'பாசனவசதி கொண்ட எந்த ஒரு பல பயிர் சாகுபடி நிலமும்' கையகப்படுத்தப்பட முடியாது. என்று கூறுகிறது. 'தவிர்க்கவியலாத பிரத்தியேகமான சூழல் தவிர்த்து' அதைத் தவிர வேறு வழியே இல்லதபோது அந்த மாவட்டத்தின் மொத்த பயிர்சாகுபடி நிலத்தில் **5** சதத்திற்கும் மேலாக கையகப்படுத்தக் கூடாதென்றும் மேலும் அவ்வாறு கையகப்படுத்தும்போது அதற்கு இணையான தரிசுநிலப்பகுதியை சாகுபடி நிலமாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்றும் சொல்கிறது. யார் இந்த வேலையைச் செய்வார்கள் எந்த காலஅவகாசத்திற்குள் செய்வார்கள் என்பது குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. எவ்வாறாயினும் இந்த வழிமுறைகள் ரயில்வே திட்டங்கள், நெடுஞ்சாலைத் திட்டங்கள், பிரதான மாவட்டச் சாலைகள் பாசன வாய்க்கால்கள், மின்சார கடத்து கம்பங்கள் இவை போன்றவற்றுக்குப் பொருந்தாது. இந்த மசோதாவின் வழிமுறைகள் எங்கு பொருந்தும் பொருந்தாது என்பது குறித்து அநேக குழப்பங்களும் சந்தேகங்களும் உள்ள நிலையில், உணவு பாதுகாப்பிற்கு இந்த மசோதா என்ன மாதிரியான பாதுகாப்பை வழங்கிவிடப்போகிறது என்பதை நன்றாகவே புரிந்துகொண்டுவிடமுடியும்.

அதே நேரத்தில் நிலத்தை அதன் வளத்திற்கு ஊறுநேராத வகையில் தொலைநோக்கோடு மிகச் சரியாக திட்டமிட உறுதிசெய்து, உணவுப்பாதுகாப்பை முடிந்தமட்டும் எல்லா வகையிலும் உத்திரவாதப்படுத்துவது அவசியமாகும். அவ்வாறான திட்டத்தைக் கொண்டிருந்தால் இந்த நாட்டில் மக்கள் நலன்கொண்ட உண்மையான தொழில்மயமாக்களுக்கு நிலத்தை கண்டுபிடிப்பதில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. ஆனால் அதற்கு அதிகாரத்தில் இருப்பவர்களிடத்தில் மக்களைப்பற்றிய அக்கறையும் உண்மையான தேசபக்தியும் இருந்திட வேண்டும். அதற்கு மாறாக நிலமானது இங்கும் அங்குமாக எங்கெல்லாம் எப்படியெல்லாம் முடியுமோ அப்படியெல்லாம் ஈவிரக்கமின்றி தயவு தாட்சணியமின்றி கையகப்படுத்தப்பட்டு மக்கள் வாழ்வை பணையம்வைத்து ஏகபோகங்கள் லாபம் சம்பாதிப்பதற்காக ஒப்படைக்கப்படுகிறது. மேலும் மக்களைப்பற்றி எந்தவிதமான அக்கறையும் இல்லாமல் விவசாய நிலங்களை அழிப்பதன் மூலம் எழவிருக்கும் உணவுப்பற்றாக்குறை நெருக்கடி குறித்த எவ்வித அக்கறையும் இல்லாமல் இவை செய்யப்பட்டுவருகின்றன. நிலத்திலிருந்து மக்களை வெளியேற்றுவது பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. இம் மசோதா **2011**ம் இதிலிருந்து மாறுபடவில்லை.

### நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் நிலை–ஜெர்மனியில் ஹிட்லரின் நாஜிகளின் விஷவாயுக் கூடங்களில் சித்திரவதைக் குள்ளானவர்களின் நிலைக்குச் சமமானது

சமீபத்திய அனுபவங்களைக் கூர்ந்துபார்க்கிறபோது இந்த நிலம் கையகப்படுத்தல் நடவடிக்கைகளில் மேற்கூறிய கவலைகள் எவ்வளவு உண்மையானதாக இருந்திருக்கிறது என்பது விளங்கும். இந்தியா பிரிட்டிஷ் காலனியாக இருந்த கால கட்டத்திலும் மற்றும் சுதந்திரத்திற்குப் பிந்தய கால கட்டத்திலும் கூட தேசமறுகட்டமைப்பு, தொழில் வளர்ச்சி, அரசாங்கம் மற்றும் தனியார் திட்டங்கள், பெரிய அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள், தொழில் நகரம்அமைத்தல் மற்றும் பிறவற்றின் பெயரால்

தொடர்ச்சி 5ம் பக்கம்

## எல் ஏ ஆர் ஆர் மசோதா 2011

# வலிமைவாய்ந்த ஒருங்கிணைக்கப்பட்ட போராட்டமே இந்த பேரபாயத்தை முறியடிக்க உதவும்

*4ம் பக்கம் தொடர்ச்சி*

நிலம் தாறுமாறாகக் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக சமீபகாலங்களாக நடந்துவரும் போக்கோடு ஒப்பிட்டால் அது எவ்விதத்திலும் குறைந்த அளவில் இருக்கவில்லை. இவ்வாறான தீவிரமான நகர்மயமாக்கல் நடவடிக்கைகள் ரியல்எஸ்டேட் வியாபாரத்தில் பெரியஅளவிற்கு ஏற்றத்தை ஏற்படுத்தின. இம்மாதிரியான தாறுமாறான நிலம் கையப்படுத்தும் செயல்முறை மிகப்பெரும்பகுதி விவசாய நிலங்களை விழுங்கிவிட்டது. பல லட்சக்கணக்காணவர்களை நிலத்திலிருந்து வேரோடு பிடிங்கியெறிந்துவிட்டது. பெரும்பாலானவர்களுக்கு இழப்பீடு சென்றடையவில்லை. அவ்வாறு கொடுக்கப்பட்ட தொகையும் உறுதியளிக்கப்பட்ட தொகையைக் காட்டிலும் மிக அற்பமானது. வாழ்வதற்கு வீடற்ற, நிலமற்ற, வேலையற்ற, நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட இம்மக்கள் பெரும்பகுதியினர் விவசாயக் குடிகளாவர். இவர்கள் நிலை தமது சொந்த இடத்திலிருந்து வெளியே துரத்தப்பட்டு சிதறுண்டதைப் போன்றோரின் நிலைக்குச் சமமானதாகும். அவர்களின் நிலைமை நாஜிகளின் விஷவாயுக் கூடங்களில் சித்திரவதை அனுபவித்தவர்களின் நிலைக்கு ஒப்பானதாகும்.

### எல்.ஏ.ஆர்.ஆர். மசோதா 2011 பிரச்சினைக்குத் தீர்வை எங்கும் நெருங்கவில்லை

பல்வேறுபட்ட பெருமைவாதங்கள் இருப்பினும் கூட இந்த எல்.ஏ.ஆர்.ஆர். 2011 மசோதா, புதிய உள்நோக்கம் மற்றும் செயல்நோக்கத்தைக் கொண்ட மற்றொரு மசோதாவாகவே இருந்திடும். இதுவரை இருந்துவந்த நிலையிலிருந்து எந்த மாற்றத்தினையும் இது ஏற்படுத்தப் போவதில்லை. இது நிலம் கையகப்படுத்தலால் பாதிக்கப்படும் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதிலோ அல்லது தாறுமாறாக நிலம் கையகப்படுத்தப்படுவதால் அதிகரிக்கும் உணவுப் பாதுகாப்பு பிரச்சினையிலோ, எங்கும் பிரச்சினையைச் சரிசெய்ய நெருங்கி வரவில்லை. மாறாக, இந்த மசோதா, மிகுந்த மனிதாபிமானம் (!) அனைவரையும் பங்கேற்கவைத்தல் (!) என்று சொல்லி ஏழை மக்களிடமிருந்து அவர்களின் ஒப்புதலின்றி நிலத்தை கைப்பற்றி, அவர்களை இரக்கமற்ற முறையில் வேரோடு பிடிங்கி வெளியே எறிந்து அவர்களை முழுவதும் சாகடிக்கவில்லை என்றாலும் உத்திரவாதமற்ற, நிலையற்ற வாழ்க்கை என்ற இருட்டுக்குள் தள்ளிவிடும் என்பது நிச்சயம். பாதிக்கப்படுபவர்களின் ஒப்புதலைப்பெற வேண்டும் என்ற பெயரளவிலான நிபந்தனை– பணபலம், ஆள்பலம், மற்றும் தனியார் முதலாளிகளின் சமூக அந்தஸ்த்து, நிர்வாகரீதியிலான நெருக்கடி ஆகியவற்றின் முன்னால் ஒன்றுமில்லாததாக ஆகிவிடும். இந்த மசோதா பொதுமக்களுக்கு ஒட்டுமொத்த சீரழிவைக் கொண்டுவருகின்ற செயல்வடிவத்தை வெற்றிகரமாக மறைத்து ஏகபோகங்களும் அவர்களின் அடிவருடிகளும், மேட்டுக்குடியினரும் நாட்டின் நிலங்களை கைப்பற்றி அவர்களின் முழுதிருப்திக்கும் பயன்படுத்திக்கொள்ள அவர்களுக்கு பாதையை எளிதாக்கிக் கொடுத்திருக்கிறது–இவ்விஷயத்தில் அது மிக வெளிப்படைத் தன்மையுடன் இருக்கிறது. தொழில்மயமாக்கலுக்கான எந்தவித முகாந்திரமும் இல்லாத தீவிர தொழில் தேக்கம் மற்றும் பின்னடைவு நிகழும் இக்காலகட்டத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலம் என்பது நகர்மயமாக்கலுக்கு அதாவது நில முதலைகளின் பெருத்த ஆதாயம் தரும் ரியல்எஸ்டேட் வியாபாரத்தை வளர்க்கவும் செல்வந்தர்களின் கட்டுக்கடங்காத வசதி வாய்ப்புகள் ஆடம்பரத்திற்குமே பயன்படும். இந்த மசோதாவின் முன் மொழிவான 'நிலம் கையகப்படுத்தல் என்பது நிலச் சொந்தக்காரர்களுக்கும் பாதிக்கப்படுபவர்களுக்கும் குறைந்தபட்ச தொந்தரவோடு செய்யப்படும்' என்பது இதயமற்ற, தந்திரமான கூற்றாகும், உயிருக்கும் வாழ்வாதாரத்திற்குமான ஒரே ஆதாரத்தினை வேரோடு பிடிங்கி எறிவது என்பதை இவர்கள் 'குறைந்த தொந்தரவோடு' செய்வார்களாம்! இதில் எது மிகுந்த வேதனையைத்தரும் என்பது குறித்து ஒருவர் வியப்படையலாம்!

### ஆளும்வர்க்கத்திற்குச் சேவைபுரியும் கட்சிகள் தங்களின் எஜமானர்களை மகிழ்விக்க தங்களுக்குள் ஒப்புதல் பெற முயற்சிக்கிறார்கள்: விழிப்புணர்வு கொண்ட தொடர்ச்சியான அணிதிரட்டப்பட்ட இயக்கமே மக்களின் தேவை

இப்படிப்பட்ட அபாயகரமான நில மசோதா நிறைவேற்றப்பட – மத்திய அரசாங்கத்தினை தலைமையேற்று நடத்திவரும் இம்மசோதாவின் பிரதானமான வடிவமைப்பாளராகிய காங்கிரஸ் தற்போது ஒப்புதல் பெறுவதற்காக அங்குலம் அங்குலமாக காய்நகர்த்துகிறது. பிரதான எதிர்கட்சியான பி.ஜே.பியுடன் ஏற்கனவே உடன்பாடு வெற்றியடைந்துவிட்டது. சி.பி.ஐ.(எம்) மற்றும் அவர்களின் சகாக்கள் மற்றும் பிற கட்சிகள் சில பிரச்சினைகளைக் கிளப்பி காலம் கடத்துகிறார்கள். ஆனால் இந்த மசோதாவின் பின்னணியில் இருக்கின்ற உண்மையான அபாயம் குறித்தும் அதன் உண்மையான செயல்வடிவம் குறித்தும் இவர்கள் வாய் திறப்பதில்லை. இந்த நிலைபாடு அவர்களின் இயற்கை சுபாவத்திற்கு மாறானதல்ல என்பதை மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். வாக்கு வங்கியை நம்பியிருக்கின்ற அனைத்து பாராளுமன்ற அரசியல் கட்சிகளும் தங்களின் வேறுபட்ட நிறங்களையெல்லாம் கடந்து அதிகார மாடங்களில் இடம்பெறுவதற்காக ஆளும் முதலாளித்துவவாதிகளின் வர்க்க நலன்களுக்கு அடிபணிந்து சேவை செய்தே ஆகவேண்டும். ஆகவே, சாராம்சத்திலும் மற்றும் அவர்களின் இதயத்தின்அடியாழத்திலிருந்தும் பணம்படைத்தவர்களுக்கும் ஏகபோகவாதிகளுக்கும் கட்டுக்கடங்காத பலன்களை கொண்டுவரப் போகும் எந்த ஒரு செயலையும் அவர்கள் எதிர்க்க முடியாது. பாராளுமன்ற ஜனநாயக முகத்திரை இந்த நாட்டில் இருக்கின்றவரை, இந்தக் கட்சிகள் வாக்கு வங்கியைப் பராமரித்துப் பாதுகாத்து வளர்க்கும் அவசியத்தின் மீதான அக்கறையின் காரணமாக– மக்களை ஏமாற்றுவதற்காக, அவர்களின் கவனத்தை உண்மையான பிரச்சினைகளிலிருந்து திசை திருப்பிட, அவர்களின் மிக மோசமான திட்டத்தை மறைத்திட, மக்கள் நல கொள்கைகளைப் பின்பற்றுவது போன்று பாவனைசெய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, மிகவிரைவாகவோ அல்லது சற்று தாமதமாகவோ அனைவரும் ஒன்றாகக் கைகோர்த்துக் கொண்டு இந்த சீரழிவைத்தரும் மசோதா நிறைவேற ஒப்புதலளிக்கக்கூடும். நிலம் வைத்திருக்கின்ற அல்லது நிலமற்ற கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் இருக்கின்ற பாடுபடும் மக்கள் ஏற்கனவே ஈவிரக்கமற்ற முதலாளித்துவச் சுரண்டலினாலும் மற்றும் பாகுபாடுகளாலும் ஒட்ட உறிஞ்சப்பட்டுள்ளார்கள்.

ஆகையால் அவர்கள் இந்த எல்.ஏ.ஆர்.ஆர் 2011 மசோதாவை எதிர்த்து ஒன்றுபட்டுக் குரலெழுப்பி போராட்ட இயக்கங்களில் திரளவேண்டும். ஒருமித்த குரலில் ஒரு உண்மை தெளிவாக்கப்பட வேண்டும் அதாவது நிலம் என்பது மக்களின் நிரந்தரச் சொத்து, அது அவர்கள்வசம் தலைமுறை தலைமுறையாக இருந்து வருகிறது. ஆகவே மக்கள் அதனை நேசிக்கிறார்கள், பூஜிக்கிறார்கள். இந்த நாட்டின் செல்வத்திற்கும் தேவைக்கும் அவசியமானவற்றை அதில் உற்பத்தி செய்கிறார்கள். எந்த ஒரு சூழ்நிலையிலும் அவர்களிடமிருந்து இந்த நிலம் பலவந்தமாகவோ அல்லது ஆசைகாட்டியோ அல்லது ஒரு தலைமுறையினருக்குக்கூட பாதுகாப்பை வழங்கவியலாத சொற்ப இழப்பீட்டைக் கொடுத்து அதன்பின் அவர்கள் பிச்சைக்காரர்களாகும் வகையில் பறிக்கப்படமுடியாது. எந்தவிதத்திலும் நிலம் அபகரித்தலை புனர்வாழ்வளித்தல் மறுகுடியமர்த்தல் என்ற போலித்தனத்தோடு சமப்படுத்திவாதிட முடியாது, அம்மாதிரியான விஷயங்களெல்லாம் நம் நாட்டில் எப்பொழுதும் இறுதியாக தெரிந்தும் தெரியாமலும் மறுக்கப்பட்டே வந்திருக்கின்றன.

ஆகவே அதிகாரத்திலிருக்கினற பாராளுமன்ற கட்சிகள்அல்லது எதிர்கட்சிகள் இந்த மசோதாவை நிறைவேற்றுவதில் வெற்றியடைந்து பாராளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டாலும் இந்த மசோதாவிற்கு எதிராக அல்லது அதன் அடிப்படையில் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராக எல்லாஇடங்களிலும் போராட்டங்கள் தொடுக்கப்படவேண்டும். எந்த சாக்குப்போக்குகளை முன்வைத்தும் சாகுபடிக்குகந்த விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்படக்கூடாது என்ற கோரிக்கையினை வலியுறுத்தி போராட்டங்கள் தொடுக்கப்படவேண்டும். புதிய தொழிற்சாலைகள் ஏதேனும் நிறுவப்படுவதாக இருந்தால் அவைகள் விவசாயத்திற்கு பயன்படாத தரிசு நிலங்களில், மூடப்பட்ட தொழிற்சாலைகள் அமைந்திருக்கும் இடங்களில் அமைக்கப்பட வேண்டும். தொடர்ச்சியான அணி திரட்டப்பட்ட இயக்கங்களும் மற்றும் வலிமையான மக்கள் அபிப்பிராயமும் மட்டுமே இந்தச் சீரழிவிலிருந்து மக்களைப் பாதுகாக்கும். சிங்கூரிலும் நந்திகிராமிலும் இம்மாதிரியான நில அபகரிப்பை எதிர்த்த தடுப்பு இயக்கங்கள் வளர்ந்து நாடுமுழுவதிலும் மக்களுக்கு உத்வேகமளித்தன. எவ்வெப் பொழுதெல்லாம் நிலங்களை கையப்படுத்தி மக்களை அவர்களின் வாழிடங்களிலிருந்தும் வாழ்வாதரத்திலிருந்தும் வெளியேற்ற முயற்சிக்கிறார்களோ அப்பொழுதெல்லாம் இதுபோன்ற பலம்வாய்ந்த மக்கள் இயக்கங்கள் கட்டப்பட்டு அது நாடுமுழுவதிலும் பரவி எழும்படி செய்யப்படவேண்டும். இதுவே இத்தருணத்தின் தலையாய தேவையாகும். ■

### மே 9, 2013 அகில இந்திய கோரிக்கை நாள்




**பள்ளிகளில் 1 முதல் 8ம் வகுப்பு வரை பாஸ்–பெயில் முறையை மீண்டும் அமுல்படுத்தக்கோரியும் நாடு முழுவதும் பெண்களுக்கு பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தக்கோரியும் மே 9, 2013 அன்று அகில இந்திய கோரிக்கை நாளாக அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO) அனுஷ்டித்தது. அன்றைய தினம் சென்னையில் ஏஐடிஎஸ்ஓ நடத்திய ஆர்ப்பாட்டம்**

## பாராளுமன்றத்தில் பாவனைப் போராட்டம்

# ஆளும் வர்க்கம் மக்களுடைய அதிருப்தியை வாக்கு அரசியலுக்குள் முடக்க முயற்சிக்கிறது

1ம் பக்கம் தொடர்ச்சி

கிறோம் என்று இதன்மூலம் மக்களுக்கு காட்டிக் கொள்ள விரும்புகிறது. குற்றவாளிகளுக்கு எதிராக அவர்கள் எவ்வளவு உயர்பதவியில் இருந்தாலும் எத்தகைய அந்தஸ்தில் இருந்தாலும் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் இத்தகைய குற்றங்கள் ஊழல்கள் முறைகேடுகள் இனிவருங் காலங்களில் நிகழாதிருப்பதை அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும் தனது அமைச்சரவை சகாக்கள் மற்றும் அவர்களுக்கு நெருக்கமானவர்கள் இத்தகைய கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை கண்டும் காணாதிருந்ததற்காக பிரதமர் பதவி விலக வேண்டும் போன்ற கோரிக்கைகள் நியாயமானவைதான். ஆனால் உண்மை யாதெனில் இவ்விவகாரங்களிலும் இக்கோரிக்கைகளுக்காகவும் பாராளுமன்ற அவைகளை நீண்டகாலமாக முடக்கியபோதிலும் இவற்றில் ஒரு பிரச்சினைகூட தீர்க்கப்படவில்லை. மக்கள் வாழ்வை அலைக்கழிக்கும் பிரச்சினைகள் ஒன்றாவது தீர்வதற்கான அறிகுறியும் தென்படவில்லை. ஏன் என்ற கேள்வி எழுவது இயற்கையே. நல்லெண்ணமும் நற்சிந்தனையும் கொண்டோர் அனைவரும் விஞ்ஞானபூர்வமான சிந்தனையோடு தற்போதைய சமூகசரித்திர சூழலில் தர்க்க ரீதியாக பகுத்தாய்ந்து இக்கேள்விக்கு சரியான பதில் தேடவேண்டியது அவசியமாகும்.

### அனைத்து கொடுமைகளுக்கும் ஆணிவேர் முதலாளித்துவமே

வாக்கு வங்கி அரசியல் நடத்தி ஆளுங்கட்சி கூட்டத்தில் இருக்கின்ற கட்சிகள் அனைத்தும் ஒன்றன்மீது மற்றொன்று குற்றச்சாட்டுகள் தொடுப்பதன் மூலம் (எதிரணிக்கட்சிகள் லஞ்சம் கொள்ளை திருட்டுத்தனம் ஆகியவற்றில் ஈடுபடுவதாக நிரூபிக்க முடிந்தால் தாங்கள் பரிசுத்தமானவர்கள் என்று அர்த்தமாகிவிடும் என இக்கட்சிகள் எண்ணுகின்றன போலும்) தாங்கள்தான் மக்கள் நலனை உயர்த்திப்பிடிப்பவர்கள் என்று காட்டிக் கொள்ள முயன்றாலும் நன்றாக உற்றுக்கவனித்தால் ஒருவர் மீது மற்றவர் குற்றஞ்சாட்டும் இக்கட்சிகள் அனைத்தும் தவறுகள் குற்றங்கள் ஊழல்கள் முறைகேடுகள் ஆகியவற்றில் ஒன்றுக்கொன்று சளைக்காமல் ஈடுபட்டுள்ளன என்பது கண்கூடாகத் தெரியும். ஏனெனில் ஊழல்கள் முறைகேடுகள் நிதி கையாடல்கள் திருட்டுத்தனம் லஞ்சம் வாங்குதல் மற்றும் இதுபோன்ற பிற கிரிமினல் நடவடிக்கைகளெல்லாம் ஏதோ ஒரு சில தனிநபர்கள் அல்லது ஒரு சிறு குழுவினரின் சொந்தமான விவகாரங்களல்ல. அமைப்புமுறையிலிருந்து இவர்களை அகற்றிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று எடுத்துக்கொள்ள முடியாது. இத்தீமைகள் அனைத்திற்கும் ஆணிவேர் வரலாற்றுபூர்வமாக காலாவதியாகிவிட்ட துர்வாடை வீசும் இந்த அமைப்பு முறையே ஆகும். இந்த அமைப்புமுறைக்குள்ளேயே பொதிந்து கிடக்கும் தீர்க்கமுடியாத நெருக்கடியில் சிக்குண்டுள்ள முதலாளித்துவமானது அழுகி மட்கும் நிலையை அடைந்துவிட்டதால் முழுக்க முழுக்க பிற்போக்கானதாகி ஊழல் புரையோடிப்போய் உருவாக்கும் நோய்களே இக்குற்றங்களாகும். பழமைதட்டிப்போன இந்த முதலாளித்துவத்தில் எந்தவொரு நிர்வாக இயந்திரமோ அல்லது ஆளும் முதலாளித்துவ நலனுக்கு சேவகம் செய்கின்ற எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது தனிநபர்களோ ஊழலிலிருந்து கிரிமினல்தனமாவதிலிருந்துகூட தப்பிக்க முடியாது. அதனால்தான் ஓட்டு அரசியல் நடத்தும் கட்சிகள் அல்லது அவற்றின் கூட்டணிகள் அனைத்தும் அவை ஆட்சியிலிருப்பினும் அல்லது எதிர்க்கட்சியாயினும் ஊழல் மோசடித்தனம் லஞ்சம் போன்ற குற்றங்களெனும் புதைகுழியில் புதைந்துள்ளன.

### பாராளுமன்றத்திற்கு வெளியில் போராட்டங்கள் நடத்துவதை மிகக்கவனத்தோடு தவிர்த்தல்

ஆகவே இப்பிறழ்வுகள் மற்றும் கிரிமினல்தனங்கள் அனைத்தையும் ஒழித்துக்கட்டுவது என்ற கேள்வி முதலாளித்துவத்தை தூக்கியெறியும் கேள்வியோடு பிரிக்கமுடியாதவாறு பின்னிப்பிணைந்துள்ளது. இந்த உண்மையை மூடி மறைக்க விரும்புவோரும் சமூக மாற்றம் குறித்த சரித்திரப்போக்கு பற்றிய அறியாமையில் உள்ளோரும் மட்டுமே இதனை மறுப்பர். ஆனால் புரட்சியின் மூலமாக முதலாளித்துவத்தை தூக்கியெறிவதென்பது நீண்டகாலம் எடுத்துக்கொள்ளும் செயல்பாடாகும். மேலும் அது பல்வேறு புறவயப்பட்ட மற்றும் அகவயப்பட்ட சூழ்நிலைகளின் முதிர்ச்சியைப்பொறுத்தும் உள்ளது. எனவே அப்படியொரு சூழ்நிலை உருவாகின்ற வரையில் மக்கள் முன்னுள்ள ஒரே வழி நீடித்துநிலைக்கக்கூடிய நன்கு அணிதிரட்டப்பட்ட சக்திவாய்ந்த ஜனநாயக இயக்கங்களை வளர்த்தெடுத்து அவ்வியக்கங்கள் மூலம் தங்களது நியாயமான கோரிக்கைகள் சிலவற்றை வென்றெடுப்பதற்கான நெருக்குதலை உருவாக்கி முதலாளித்துவ அரசாங்கங்களை நிர்ப்பந்திப்பதாகும். இயக்கங்கள் தரும் நெருக்குதல் ஊழல்வாதிகளையும் மோசடிக்காரர்களையும் சற்றாவது தடுத்து தேவையான நடவடிக்கைகளை சிறிதளவேனும் மேற்கொள்வதற்கு நிர்வாகத்தை நிர்ப்பந்திக்கும்.

முதலாளித்துவத்தின் ஆரம்ப காலகட்டத்தில் அப்போது காலாவதியாகி பிற்போக்கானதாகிவிட்ட நிலப்பிரபுத்துவமுடியாட்சி முறையை ஒழித்துக்கட்டுவதற்காக பாராளுமன்றத்திற்குள் நடத்தும் போராட்டங்களோடு கூடவே பாராளுமன்றத்திற்கு வெளியேயும் போராட்டங்கள் நடத்துவதை முதலாளித்துவ ஜனநாயக கோட்பாடு அங்கீகரித்திருந்தது. ஆனால் மரணப்படுக்கையில் வீழ்ந்து அழுகி காலாவதியாகிவரும் இன்றைய முதலாளித்துவம் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஒன்றன்பின் ஒன்றாக பறித்து ஜனநாயக நிறுவனங்கள் அனைத்தையும் செயலிழக்கச்செய்து இன்னும் இதுபோன்ற ஜனநாயக விரோத செயல்களில் ஈடுபடுவதன் மூலம் தன் வாழ்நாளை எப்படியேனும் நீட்டித்துக் கொள்ளலாம் என்ற கனவோடு பல்வேறு உரிமைகளை பறிப்பதுடன் முரண்பட்ட கருத்தைக்கொண்டிருப்பதற்கான உரிமையையும் எதிர்ப்பு தெரிவிப்பதற்கான உரிமையையும்கூட பறிக்கிறது. எனவே ஜனநாயக இயக்கங்களும் அவற்றின் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு வடிவங்களும் சுமுகமான சூழலையையும் சட்டம் ஒழுங்கையும் சீர்குலைப்பதாக கூறி ஆளும் வர்க்கமும் அதன் அரசாங்கங்களும் ஜனநாயக இயக்கங்களை கொடூரமாக நசுக்குகின்றன. அழிந்து காலாவதியாகி வருகின்ற பாராளுமன்ற ஜனநாயகத்தின் வரம்புகளுக்குள் மக்களுடைய குறைகளையும் எதிர்ப்பையும் முடக்கப்பார்க்கின்றன. இவ்வாறு ஆளும் வர்க்கத்தால் ஆசீர்வதிக்கப்பட்ட, திட்டமிட்ட முறைகேடுகளுடன் நடத்தப்படும் தேர்தலில் ஏதேனும் ஒரு கட்சி அல்லது கூட்டணியை தேர்ந்தெடுப்பதன் மூலம் மக்களின் கோபமும் குறைகளும் தீர்ந்துவிடுவதை உறுதிப்படுத்த முயல்கிறார்கள்.

முதலாளித்துவ வர்க்க நலனுக்கு சேவகம் செய்து துர்நாற்றமெடுக்கும் முதலாளித்துவ அமைப்பு முறையை பாதுகாக்கும் பொறுப்பேற்றுள்ள கட்சிகளின் நடத்தையிலிருந்து இதுதான்புலப்படுகிறது. இக்கட்சிகள் ஆளுவோரின் வர்க்க நலனை திட்டமிட்டமுறையில் நன்கு கடைபிடிப்பதோடு ஆளும் வர்க்கத்தை சங்கடத்திற்கு உள்ளாக்கக்கூடிய எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடாதிருப்பதில் மிகக்கவனமாக இருக்கின்றன. மக்கள் மிகவும் எதிர்பார்க்கின்ற மக்களின் எரியும் பிரச்சினைகளுக்காக நடத்தவேண்டிய போராட்டங்களை பாராளுமன்றத்திற்கு வெளியேவளர்த்தெடுப்பதற்கு எந்த முயற்சியும் மேற்கொள்ளாமல் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் அதைச்சுற்றியும் பாவனைப்போராட்டங்களை அரங்கேற்றுவதில்தான் இக்கட்சிகள் அனைத்தும் ஈடுபட்டுள்ளன. இதன்மூலம் பாராளுமன்றத்திற்கு வெளியே மற்றவர்களால் நடத்தப்படும் போராட்டங்களிலிருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்பி மக்கள் நலனை உயர்த்திப்பிடிக்கும் ஜாம்பவான்கள் தாங்களே என ஊடகங்களின் உதவியோடு மக்கள் முன்பு தங்களை காட்டிக்கொள்கிறார்கள். மக்களுக்கு தாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம் என்ற உணர்வு சிறிதும் இல்லை. அல்லலுறும் மக்களின் துன்ப துயரங்கள் அதிகரிப்பதைக்கண்டு எந்தவொரு உண்மையான விமர்சனமும் இல்லை. அவர்களை பொறுத்தவரையில் மக்கள் வெறும் வாக்காளர்களே. எனவே தங்களது வாக்குவங்கிகளை வளர்த்துக்கொள்வதற்காகவும் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் நாடகமேடையில் வேடம் தரித்து நடிப்பதைப்போல அதிகரித்துவரும் மக்களின் கோபத்தையும் வெறுப்பையும் தேர்தல் ஆதாயமாக மாற்றுவதற்காகவும் முதலாளித்துவ தேர்தல் அரசியலெனும் கூட்டுக்குள் மக்களை முடக்கிவைப்பதற்காகவும் சில பாவனை போராட்டங்களை நடத்துகிறார்கள். நியாயமான கோரிக்கைகளின் அடிப்படையில் உண்மையான மக்கள் இயக்கங்களை வளர்த்தெடுப்பதில் இவர்கள் அக்கறைகொள்வதில்லை. அதற்கு துணிவதும் இல்லை. ஏனெனில் இப்படிப்பட்ட போராட்டங்களை வளர்த்தெடுப்பதால் அவர்களது எஜமானர்களான ஆளும் ஏகபோக முதலாளித்துவவாதிகளின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும். அதனால் ஆட்சியில் தொடர்ந்து நீடிப்பதோ எதிர்காலத்தில் ஆட்சியைக்கைப்பற்றுவதற்கான சாத்தியமோ பாதிக்கப்படும் என்பதால் இவர்கள் ஜனநாயக இயக்கங்கள் வளர்த்தெடுக்க முன்வருவதில்லை. மாறாக வரவிருக்கும் தேர்தல்களில் ஆதாயம் தேடுவதற்காக மக்களின் நியாயமான கோரிக்கைகளையும் குறைகளையும் பயன்படுத்திக் கொண்டு பாராளுமன்றத்திற்குள் பெருங்கூச்சலும் குழப்பமும் ஏற்படுத்தி பாராளுமன்ற நடவடிக்கைகளை நடைபெறவிடாமல் தடுத்து அவையை முடக்கி அவற்றின் மூலம் மக்கள் நலனை உயர்த்திப்பிடிக்கும் ஹீரோக்களாக தங்களை காட்டிக்கொள்கிறார்கள். சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர் பதவியென்பது இவர்களைப்பொறுத்தவரை மக்கள் சேவைக்கான பொறுப்பை நிறைவேற்றவேண்டிய கௌரவமான பதவியல்ல. மாறாக மடியில் விழுந்த கனிபோல தங்களது சொத்து சுகத்தை பெருக்கிக் கொள்வதற்காக கிடைத்த பதவியாகும். பணம் பொருள் ஊடக விளம்பரம் ஆள்பலம் ஆகியவற்றை ஆளும் முதலாளித்துவ வர்க்கம் இக்கட்சிகளுக்கு அளித்து இவற்றில் ஏதேனும் ஒரு கட்சியையோ அல்லது சில கட்சிகளின் கூட்டணிகளில் ஒன்றையோ ஆட்சிக்கட்டிலில் அமர்த்திவிடும். எதிர்க்கட்சியாக விளங்கும் கட்சிகளுக்குக்கூட ஆளும் வர்க்கத்தின் ஆசி கிடைக்கும். இந்த ஆசியினால் அவர்கள் சட்டமன்றம் பாராளுமன்றத்திற்குள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் நுழைந்து எதிர்காலத்தில் தாங்களும் ஆளுங்கட்சியாவோம் என்ற எதிர்பார்ப்பில் காத்திருப்பர். இவ்வாறு ஜோடிக்கப்பட்ட தேர்தல் நாடகத்தில் இக்கட்சிகள் அல்லது இவற்றின் கூட்டணிகள் மாறி மாறி ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டிருக்கும். செயலளவில் பார்த்தால் இவர்கள் அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். ஒரு 'அ' கட்சி ஆட்சியிலிருந்தால் வேறொரு 'ஆ' கட்சி மக்கள் நலனின் ஜாம்பவான் என்று காட்டிக் கொண்டு போர்க்கொடி உயர்த்தும் அடுத்த சுற்றில் அதாவது அடுத்த தேர்தலில் 'ஆ' கட்சி ஆட்சியைக் கைப்பற்றும்போது 'அ' கட்சி எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு பொறிபறக்கப் பேசும். இவற்றில் ஏதேனும் ஒரு கட்சி எதிர்க்கட்சியாக இருக்கவேண்டும் என்பது வர்க்கத்தின் தேவையாகும். அப்போதுதான் ஆளுங் கட்சியாக இருக்கின்ற கட்சி மக்களின் வெறுப்புக்கு ஆளாகி மக்களின் நம்பிக்கையை இழக்கின்றபோது அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான மாற்று சக்தியாக எதிர்கட்சி உருவெடுக்க முடியும்.

### சமீபத்திய சம்பவங்கள் இவ்வுண்மைக்கு சான்று பகரும்

சமீபத்தில் நிகழ்ந்துள்ள சம்பவங்கள் நாம் கூறியவற்றுக்கு சான்றாக அமையும். இன்று ஊழல் விவகாரத்தில் பாரதீய ஜனதா கட்சி பாராளுமன்றத்தை முடக்கி காங்கிரஸ் பிரதமர் ராஜினாமா செய்யவேண்டும் என்று கோருகிறது. தனது நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாமல் அரசாங்கம் பிடிவாதமாக இருப்பதால் வேறு வழியின்றி பாராளுமன்ற அவைகளின் அலுவல்கள் நடைபெறாமல் முடக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தாங்கள் ஆளானதாக பா.ஜ.க கூறுகிறது. மறுபுறத்தில் காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கமோ எதிர்க்கட்சிகளின் பொறுப்பற்ற நடத்தையால் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்ந்து பாதிக்கப்படுவதாக கவலை தெரிவிக்கிறது. இதேபோலவே முன்பு பா.ஜ.க ஆட்சியிலிருந்த காலத்தில் அப்போதைய அமைச்சர்களுக்கெதிராக ஊழல் புகார்கள் எழுந்தபோது பா.ஜ.கட்சியைச்சேர்ந்த பிரதமர்

தொடர்ச்சி 7ம் பக்கம்

## பாராளுமன்றத்தில் பாவனைப் போராட்டம்

# பாராளுமன்றத்துக்கு வெளியிலான போராட்டத்தை பாராளுமன்ற போராட்டத்துடன் ஒருங்கிணைக்க வேண்டும்

*6ம் பக்கம் தொடர்ச்சி*

பதவி விலகவேண்டும் என்று அப்போது எதிர்க்கட்சியாக இருந்த காங்கிரஸ் கோரியது. எதிர்காலத்திலும் பா.ஜ.கட்சியோ அல்லது வேறு ஏதேனுமொரு முதலாளித்துவ கட்சியோ அல்லது கூட்டணியோ ஆட்சிக்கு வந்தாலும் இதே கதைதான் தொடரும். இந்தியாவின் தென் மாநிலங்களில் ஒன்றான கர்நாடகாவில் ஆட்சியிலிருந்த பா.ஜ.கட்சியை சேர்ந்த முதல்வர் சட்டவிரோத சுரங்க அனுமதி மற்றும் நிலம் வியாபார ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளானபோது அம்மாநிலத்தில் எதிர்க்கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சி முதலமைச்சரின் ராஜினாமா கோரி பெரும் கூச்சல் எழுப்பியது. மேற்கு வங்க மாநிலத்தில் சட்ட விரோத சாரதா சீட்டுக்கம்பெனி நடத்திய விவகாரத்தில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியும் முந்தைய ஆளுங்கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் ஒருவர் மீது மற்றவர் பொறுப்பை சுமத்தி குற்றச்சாட்டுகளை வீசுகின்றனர். உண்மை யாதெனில் சில ஆதாயங்களுக்காக இவ்விரு கட்சிகளுமே இந்த சட்டவிரோத சீட்டுக்கம்பெனி நடத்தியவர்களோடு சினேகம் கொண்டு அவர்களை ஆதரித்த கட்சிகள்தான். உத்தரப்பிரதேசத்தில் மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி முலாயம் சிங்கின் சமாஜ்வாதி கட்சி ஆகிய இரண்டுமே கழுத்தளவு ஊழலில் மூழ்கி சட்டவிரோத சமூக விரோத கும்பலின் ஆதரவோடு அரசியல் நடத்திக்கொண்டு இவ்விரு கட்சிகளும் ஒன்றுக்கொன்று குடுமிப்பிடி சண்டையிட்டுக் கொள்கின்றன ஆனால் மத்தியிலுள்ள ஆளும் காங்கிரஸ் அரசாங்கத்தோடு ஓரணியில் இருக்கின்றன.

ஆனால் இக்கட்சிகள் அனைத்தும் ஒரு விஷயத்தில் மிகக்கவனமாக இருக்கின்றன. தேர்தல் ஆதாய நோக்கோடு இக்கட்சிகள் ஒன்றின் மீது ஒன்று எவ்வளவு எதிர்ப்பு காட்டினாலும் தங்களது நடவடிக்கைகள் ஒருபோதும் முதலாளித்துவ அமைப்பு முறையை அம்பலப்படுத்திவிடக்கூடாது என்பதிலும் ஆளும் வர்க்கத்துக்கு சங்கடம் ஏற்படுத்தி அதன் ஒட்டுமொத்த வர்க்க நலனுக்கு குந்தகம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதிலும் மிக ஜாக்கிரதையாக உள்ளன. நிஜத்தை விட்டுவிட்டு பாராளுமன்றம் சட்டமன்றங்களுக்குள் நிழலோடு இக்கட்சிகள் நடத்தும் சண்டைகள்கூட இதைத்தான் வெளிப்படுத்துகின்றன. உதாரணத்திற்கு பா.ஜ.க தலைமையிலான எதிர்க்கட்சிகள் பாராளுமன்ற அவைகளை முடக்கி அவையிலிருந்து வெளிநடப்புகள் செய்தபோதினும் நிதி மசோதா மற்றும் ரயில்வே பட்ஜெட் ஆகிய இரு மிக மோசமான மக்கள் விரோத மசோதாக்களை காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கம் நிறைவேற்றுவதில் எந்த சிக்கலையும் ஏற்படுத்தவில்லை. ஆளும் வர்க்கத்தின் நலனுக்கு அடிபணிவதில் இக்கட்சிகள் கொண்டுள்ள புரிதல் நன்கு புலப்படுகிறது. அதே நேரத்தில் மீண்டும் மீண்டும் தடங்கலுக்குள்ளாகும் பாராளுமன்ற அவைகளில் நியாயமான மக்கள் கோரிக்கைகளை புதிதாக உருவெடுக்கும் பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகள் உட்பட முக்கியமான விவகாரங்களை விவாதிக்க முடியவில்லை. மக்கள் கோரிக்கைகளை உயர்த்திப்பிடிப்பது போல பாவனை செய்து இக் கட்சிகள் தங்களது தேர்தல் ஆதாயங்களை பெருக்கிக்கொண்டதைத் தவிர வேறு ஒரு பிரயோஜனமும் மக்களுக்கு இல்லை.

### பாராளுமன்ற போராட்டத்தை எவ்வாறு பார்க்கவேண்டும்

இவற்றையெல்லாம் நோக்குங்கால் பாராளுமன்ற போராட்டம் முழுவதுமாகவே பொருத்தமற்றதாகிவிட்டதா என்ற கேள்வி நமக்கு எழுவது இயற்கையே. நியாயமான கோரிக்கைகள் மற்றும் வாழ்வின் எரியும் பிரச்சினைகளின் அடிப்படையில் பாடுபடும் மக்களின் அனைத்துப்பிரிவினரையும் உள்ளடக்கி பாராளுமன்றத்திற்கு வெளியே சக்திவாய்ந்த நன்கு அணிதிரட்டப்பட்ட ஜனநாயக வெகுஜன இயக்கங்களை வளர்த்தெடுக்காமல் நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல வெறும் பாராளுமன்ற போராட்டம் மூலம் மட்டுமே நாம் விரும்பும் நிவாரணத்தை தற்காலிகமாகக்கூட அடைய முடியாது. பாராளுமன்றத்திற்கு வெளியே நடக்கும் இப்போராட்டங்களின் குரல் பாராளுமன்றத்திற்குள்ளும் ஓங்கி ஒலித்து அரசாங்த்தை பீதியில் ஆழ்த்த வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால் பாராளுமன்றத்திற்குள் நடத்தப்படும் போராட்டம் பாராளுமன்றத்திற்கு வெளியே நடத்தப்படும் போராட்டத்தோடு நன்கு ஒருங்கிணைக்கப்பட வேண்டும். பாராளுமன்றத்திற்கு வெளியில் நடத்தப்படும் போராட்டங்கள்தான் முதன்மையானவையாகும். ஆகையால் இப்போராட்டங்கள்தான் மக்கள் சக்தியை நிலைநிறுத்துவதில் தீர்மானகரமான பங்காற்றி தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கின்றன. மக்கள் பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகள் குறித்து பாராளுமன்ற அவைகளில் விவாதிப்பதற்கு கடந்த காலங்களில் இருந்த ஒருசில வாய்ப்புகள்கூட தற்போது குறிப்பிடத்தக்க அளவிற்கு ஒழிக்கப்பட்டுவிட்டன. முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிச புரட்சியெனும் பீதியால் பீடிக்கப்பட்டுள்ள ஆளும் முதலாளித்துவ வர்க்கமானது விமர்சனத்திற்கும் தர்க்க ரீதியான விவாதங்களுக்கும் குறைந்தபட்ச வாய்ப்புகூட வழங்கத்தயங்குகிறது. எனவே சட்டமன்றம் படிப்படியாக செயலிழந்துபோகச் செய்யப்பட்டு ஆளும் ஏகபோகவாதிகளின் மற்றுமொரு உறுப்பாக மாறிவிட்டது.

தனக்கு நன்றாக ஒத்துப்போகக்கூடிய அரசியல் கட்சிகளின் உதவியோடு அவை ஆளுங்கட்சியாயினும் எதிர்க்கட்சிகளாயினும் வேறுபல மக்கள் விரோத நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு பாராளுமன்ற அவைகள் கூடுகின்ற அமர்வுகளின் எண்ணிக்கையை திட்டமிட்டவகையில் ஆளும் வர்க்கம் குறைக்கின்றது. அவ்வாறு குறைக்கப்பட்ட அவைகளை தொடர்ந்து முடக்கி முக்கியமான விஷயங்களில் அர்த்தமுள்ள விவாதங்களும் கலந்துரையாடல்களும் இல்லாமல் பார்த்துக்கொள்கிறது. சங்கடந்தரும் கேள்விகளை அரசாங்கம் எதிர்கொள்ளவேண்டிய சூழ்நிலை ஏற்படாமலும் பார்த்துக்கொள்கிறது. கொஞ்சம் தூண்டப்பட்டால்கூட அவையை ஒத்திவைப்பதாகவோ அல்லது கூட்டத்தொடரை குறித்த காலத்திற்கு முன்னதாகவே முடிப்பதாகவோ அரசாங்கத்தரப்பு சபாநாயகர் மூலமாக ஆளும் வர்க்கம் அறிவிக்கிறது. எனவே தங்களது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கும் குறைந்தபட்ச நிவாரணத்தை பெறுவதற்கும் பாராளுமன்றத்திற்கு வெளியே உக்கிரமான போராட்டங்களை வளர்த்தெடுப்பதைத்தவிர வேறு வழியேதும் மக்கள் முன்பு இல்லை. ஆனால் அரசியல் களத்தில் ஊடகங்களால் முன்னிறுத்திக் காட்டப்படும் பெரும்பாலான பாராளுமன்றக் கட்சிகள் மிக முக்கியமான இப்பாதையிலிருந்து வெகுதொலைவிற்கு விலகிச்செல்கின்றன.

எனவே இன்றைய சூழ்நிலையில் அரசாங்கத்தின் மக்கள் விரோத கொள்கைகளையும் பாடுபடும் மக்களின் குரல்வளையை நசுக்கும் ஆளும் வர்க்கத்தின் வஞ்சகத்திட்டத்தையும் அம்பலப்படுத்துவதற்காக பாராளுமன்றத்திற்கு வெளியே சக்திவாய்ந்த இயக்கங்களை வளர்த்தெடுப்பதோடு கூடவே பாராளுமன்ற அவைகளையும் பயன்படுத்த வேண்டியது மக்களின் உண்மையான பிரதிநிதிகளின் பொறுப்பாகும். இவ்வாறு செய்கையில் கைவசமுள்ள போராட்ட வழிகளான வெளிநடப்பு செய்தல் அவை நடவடிக்கைகளின்போது கோஷமெழுப்புதல் கூட்டத்தொடரை புறக்கணித்தல் என அனைத்தையும் பயன்படுத்திக்கொள்ளவேண்டிய தேவை ஏற்படலாம். ஆனால் இவ்வழிமுறைகளையெல்லாம் எந்த அளவிற்கு பயன்படுத்திக்கொள்வது என்பது பாராளுமன்றத்திற்கு வெளியே நடத்தப்படும் போராட்டங்களின் உக்கிரத்தன்மையை பொறுத்ததாகும். இதற்கு மாறாக காங்கிரஸ் பா.ஜ.க போன்ற முதலாளித்துவ கட்சிகளும் சமூக ஜனநாயக கட்சிகளாக தரந்தாழ்ந்துவிட்ட போலி மார்க்சிஸ்ட் கட்சிகளான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) போன்றவையும் பாராளுமன்றத்திற்கு வெளியே போராட்ட இயக்கங்களை வளர்ப்பதற்கு எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளாமல் அற்ப சொற்ப காரணங்களுக்காகக் கூட பாராளுமன்ற அவைகளை முடக்குவதற்கு எல்லா வழிமுறைகளையும் கையாள்கிறார்கள். ஆகவே பாராளுமன்றத்திற்குள் எழுப்பப்படும் பெரும் கூச்சல்களும் ஆரவாரமும் ஊடக வெளிச்சத்தில் நடத்தப்படும் நாடகங்களும் நீண்ட நேரத்திற்கு அவைகள் நடைபெறாமலிருப்பதால் தூண்டிவிடப்படும் கூக்குரல்களும் பிரச்சினைகளை தீர்ப்பது என்ற உண்மையான கேள்வி வரும்போது அமைதி காக்கின்றன. இதன் விளைவாக சக்திமிக்க வடிவங்களில் நடத்தக்கூடிய பாராளுமன்ற போராட்டங்கள் மழுங்கிப்போய்விட்டன. நீடித்து நிலைக்கும் ஜனநாயக இயக்கங்களில் பங்கேற்கும் போக்கில் தோன்றக்கூடிய தேவையான அரசியல் விழிப்புணர்வு இல்லாத சூழ்நிலையில் மேலே விளக்கியுள்ள முறையில் எதிர்க்கட்சிகள் தெரிவிக்கும் எதிர்ப்பும் கண்டனமும் மக்கள் நலனை பிரதிபலிக்கின்றன என ஊடகங்கள் செய்யும் பிரச்சாரத்திற்கு மக்கள் பலியாவதால் இத்தகைய நடவடிக்கைகளை தடை செய்யவேண்டியது அவசியமாகிறது. இவ்வாறாக பந்த்துகள் வேலை நிறுத்தங்கள் கடையடைப்புகள் போன்ற வடிவங்களில் பாராளுமன்றத்திற்கு வெளியே நடத்தப்படும் போராட்டங்களை சமூக ஜனநாயக கட்சிகளும் மற்றவர்களும் தவறாக கையாண்டதால் அவற்றை தடை செய்தது போலவே அனைத்து வடிவிலான ஜனநாயக போராட்டங்களையும் தடை செய்வதற்கு மக்களின் ஆதரவும் பொதுக்கருத்தும் மிகவும் நயவஞ்சகமான முறையில் திரட்டப்படுகிறது. சொல்லப்போனால் இதுபோன்ற வடிவங்களிலான பாராளுமன்ற போராட்டங்கள் எந்த அளவிற்கு பலனளிக்கும் என்பது குறித்து மக்கள் மனங்களில் ஏற்கனவே சில கேள்விகள் உள்ளன. தனக்கு ஒத்து ஊதுகின்ற ஊடகங்களின் துணையோடு இக்கருத்துக்களை ஆளும் வர்க்கம் நன்கு ஊக்கப்படுத்தி வளர்த்து இவ்வடிவங்களிலான போராட்ட முறைகள் அனைத்தையும் ஒரு நாள் தடைசெய்யும். நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து பாராளுமன்றத்திற்கு வெளியில் நடத்தப்படும் போராட்ட இயக்கத்தின் கோஷங்களில் ‘பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தை நோக்கி பேரணி’ என்பதும் ஒன்றாகும். சட்டமன்றம் பாராளுமன்றம் செயலற்று தொடர்ந்து முடங்கிக்கிடக்குமானால் பாராளுமன்றத்தை நோக்கி அணிவகுத்துச்செல்வோரின் கோரிக்கைகள் உள்ளே எவ்வாறு எதிரொலிக்கும்? ஆளும் வர்க்கத்தின் கைப்பாவையாக விளங்கும் அதிகார வெறிபிடித்த அரசியல் கட்சிகள் இவ்வாறு அற்பசொற்ப காரணங்களுக்காக பாராளுமன்றத்தை முடக்கி அதேசமயம் பாராளுமன்றத்திற்கு வெளியே சக்திவாய்ந்த இயக்கங்களை வளர்த்தெடுக்கத்தவறுவதன் மூலம் நியாயமான உரிமைகளை மக்களிடமிருந்து பறிக்கின்றன. பாராளுமன்றத்தை ஊமையாக்கி முடமாக்கும் தனது உள்நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஆளும் வர்க்கத்திற்கும் உதவுகின்றன. இங்கேதான் அபாயம் பொதிந்துள்ளது.

### மக்கள் முன்னுள்ள கடமை

ஆளும் வர்க்கம் அதன் அடிவருடிகள் அதற்கு கூஜா தூக்குபவர்கள் ஆகியோரின் மிகக்கொடிய கூட்டுச்சதியை ஒடுக்கப்படும் மக்கள் புரிந்துகொள்ள வேண்டிய தருணம் இதுவாகும். முதலாளித்துவ கட்சிகள் குட்டி முதலாளித்துவ கட்சிகள் அவற்றின் கூட்டணிகள் என ஏதேனும் ஒன்றுக்கு தேர்தல்களில் மாறி மாறி வாக்களித்து ஆட்சிக்கு வரும் கட்சிகளை மாற்றுவதால் ஏமாற்றும் மோசடியும்தான் மிஞ்சும். துஷ்டத்தனமான சூழ்ச்சிகள் அதிகரித்து சட்டங்கள் நியதிகள் விதிகள் அனைத்தும் துரிதகதியில் மீறப்பட்டு ஊழல்வாதிகள் மோசடிக்காரர்கள் கிரிமினல்கள் பன்மடங்கு அதிகமாக உருவாக்கப்பட்டு சாதாரண மக்களின் வாழ்க்கை மேலும் தாங்கொணா சுமையாக மாறும். முதலாளித்துவத்தை தூக்கியெறிகின்ற வரை பாராளுமன்றத்திற்குள்ளும் பாராளுமன்றத்திற்கு வெளியேயும் கடுமையான போராட்ட இயக்கங்களை சாதாரண மக்கள் வளர்த்தெடுக்கவேண்டும். உயர்ந்த கலாச்சாரம் ஒழுக்க நெறிகளின் அடிப்படையில் சரியான புரட்சிகரமான தலைமையின் கீழ் நீண்ட நெடிய சக்திவாய்ந்த இயக்கங்களை பாராளுமன்றத்திற்கு வெளியே வளர்த்தெடுக்க வேண்டியது ஒருபுறம் அவசியமாகியுள்ள அதே நேரத்தில் அடிக்கு மேல் அடி கொடுத்து மக்கள் வாழ்க்கையோடு விளையாடி வரும் ஆளும் வர்க்கத்தின் ஏஜென்டுகளாக விளங்கும் இக்கட்சிகளை முழுவதுமாக அம்பலப்படுத்தி முற்றிலுமாக தனிமைப்படுத்தவேண்டியதும் அவசியமாகவுள்ளது. ■

Registered News Paper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 27th June 2013

பாட்டாளி சிந்தனை

Post. Reg. No: TN/CCN/429/2012-14
WPP Licence No.: TN/CCN/153/2012-14
Registered with the Registrar of Newspaper in India No : 62018/88

# தோழர் பிரதிபா முகர்ஜி அவர்களின் வாழ்க்கையிலிருந்து இளம் தோழர்கள் கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது

*1ம் பக்கம் தொடர்ச்சி*

கட்சியின் பல்வேறு மாநிலக் கமிட்டிகளின் பிரதிநிதிகள், கல்கத்தா ஹார்ட்கிளினிக் மற்றும் மருத்துவமனையின் நிர்வாகக்குழு சேர்மன் பேராசிரியர் துருப ஜோதி முகபத்யாய மற்றும் மருத்துவமனை ஊழியர்கள் அனைவரும் மறைந்த தலைவருக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

மறுநாள் மே 18 அன்று மாலை தோழர் பிரதிபா முகர்ஜி அவர்களின் உடல் செங்கொடிகளாலும் மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டு கொல்கத்தாவிலிருந்தும் அதற்குத் தொலைவில் உள்ள மாவட்டங்களிலிருந்தும் கட்சி மற்றும் வெகுஜன தலைவர்கள், கட்சி ஊழியர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள் ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக மத்திய கட்சி அலுவலகத்தில்வைக்கப்பட்டது. கட்சித் தோழர்கள் நண்பர்கள் பொதுமக்கள் மட்டுமல்லாது சி.பி.ஐ., சி.பி.ஐ.(எம்), சி.பி.ஐ (எம்.எல்.லிபரேசன்) ஆர்.எஸ்.பி. போல்ஷவிக் பார்ட்டி மற்றும் பிறகட்சி பிரதிநிதிகளும் ஆளும் திரிணமூல் காங்கிரஸின் (TMC) முக்கியத் தலைவர்களும் மேற்கு வங்க அரசாங்கத்தின் அமைச்சர்களும் மலர் அஞ்சலி செலுத்தினர். மேற்கு வங்க முதல்வரின் சார்பாக முதல்வரிடமிருந்து இரங்கல் செய்தியை மாநில கேபினெட் உறுப்பினர் ஒருவர் சமர்ப்பித்தார். புகழ்பெற்ற மருத்துவர் டாக்டர் ஏ.பி.தத்தா மலர் அஞ்சலி செலுத்தினார். இறுதியாக எஸ்.யு.சி.ஐ (கம்யூனிஸ்ட்)ன் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ்கோஷ் சார்பாக தோழர் தேவ பிரசாத் சர்க்கார் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். பொலிட்பீரோ உறுப்பினர்கள் தோழர் ரஞ்சித்தார், தோழர் மணிக்முகர்ஜி தோழர் அசித் பட்டாச்சார்யா ஆகியோரும் தத்தமது இறுதி மரியாதையை செலுத்தினர். பின்னர் அன்னாரது இறுதியாத்திரை கட்சியின் மத்திய அலுவலகத்திலிருந்து புறப்பட்டு தென் கொல்கத்தாவில் உள்ள தகன அரங்கத்திற்கு கட்டுப்பாடுடன் கூடிய ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் மிகுந்த கண்ணியத்துடன் சர்வதேசப் பண் மற்றும் தோழர் பிரதிபா முகர்ஜியை மிகவும் ஈர்த்த, தனது வாழ்க்கையின் இறுதி வரை தன்னை பின்பற்றக்கூடிய மாணாக்கராக உருவாக்கிய ஆசானும் எஸ்.யு.சி.ஐ.(கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளரும் பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவருமான தோழர் சிப்தாஸ் கோஷின் மீதான பாடலை இசைத்த வண்ணம் சென்றனர்.

தனது இளம்பிராயத்திலேயே தோழர் பிரதிபா முகர்ஜி அவர்கள் தோழர் சிப்தாஸ் கோஷின் சிந்தனை மற்றும் அவருடன் நேரடியான தொடர்புக்கு வந்தார். அப்பொழுதெல்லாம் தனது சகோதரரும் தோழர் சிப்தாஸ் கோஷின் மிகச்சிறந்த உற்ற தோழரும் நமது கட்சியின்காலம்சென்ற பொதுச் செயலாளருமான தோழர் நிஹார் முகர்ஜியை சந்திக்க கொல்கத்தா கட்சி மையத்திற்கு அடிக்கடி வருவார். அம்மாபெரும் தலைவரின் சிந்தனையாலும் அவரின் புரட்சிகரஆளுமையினாலும் காந்தம்போல் கவரப்பட்டு வெகுவிரைவில் கட்சியில் இணைந்தது மட்டுமின்றி நீண்ட தளர்வற்ற கட்சி வாழ்க்கைப் போராட்டத்தையும் அவர் துவக்கிவிட்டார். தொடர்ந்து தனக்கு வழங்கப்பட்ட அடுக்கடுக்கான ஸ்தாபனப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் தான் தகுதிபடைத்தவர் என்பதை நிரூபித்தார்.

மே, 24 அன்று கொல்கத்தா பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்ற நினைவுக் கூட்டத்தில் மேற்கு வங்க மாநிலச் செயலாளரும் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினருமான தோழர் சுமன் போஸ் உரையாற்றினார். தோழர் பிரதிபா முகர்ஜி அவர்களின் வாழ்க்கையின் சுடர்விடும் அம்சங்களும் முக்கியத்துவம் வாய்ந்த அவரது புரட்சிகர குணாதிசயங்களும் இன்றைய தினங்களில் கட்சியில் சேரும் எண்ணற்ற இளைய தோழர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறது என்று கூறினார். இக்கூட்டத்திற்கு தோழர் தேவபிரசாத் சர்க்கார் தலைமையேற்றார். பொலிட்பீரோ உறுப்பினர் தோழர் ரஞ்சித்தார், மத்தியக்கமிட்டி உறுப்பினர் கோபால்குண்டு, சங்கர் சாஹா மற்றும் சாயா முகர்ஜி ஆகியோர் மேடையில் வீற்றிருந்தனர். மறைந்த தலைவரின் உருவப்படத்திற்கு அவர்கள் மலர் அஞ்சலி செலுத்தினர். கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷின் சார்பாகவும் தோழர் சங்கர் சாஹா மலர் அஞ்சலி செலுத்தினார். மாநிலக் கமிட்டியின் இரங்கல் செய்தியை தோழர் தேவபிரசாத் சர்க்கார் வாசித்தார்.

### தோழர் சுமன்போஸ் தனது உரையில்:

இளம் பருவத்திலேயே தோழர் பிரதிபா முகர்ஜி அவர்களுக்கு எஸ்.யு.சி.ஐ. (கம்யூனிஸ்ட்) கட்சியின் இளம்கம்யூனிஸ்டுகள் அமைப்பான கம்சோமால் (komsomol)ஐ நடத்தும் பொறுப்பு வழங்கப்பட்டது. இதன் இளம் உறுப்பினர்களை தோழர் சிப்தாஸ் கோஷ் நேரடியாகவே தனது தனிப்பட்ட கவனிப்பில் நேசத்துடன் வளர்த்தார். அவரின் இக்கவனிப்பு தோழர் பிரதிபா முகர்ஜியையும் ஒரு புரட்சியாளராக வெகுவிரைவிலேயே வளர்ப்பதற்கு உதவியது. தோழர் முகர்ஜியும் 1956 வாக்கில் மேற்கு வங்கத்தின் பிர்பூம் மாவட்டத்தில் கட்சி ஸ்தாபனத்தை வளர்க்கும் சவாலை தயக்கமின்றி ஏற்றுக்கொண்டார். விரைவிலேயே அம்மாவட்டத்தின் ஏழைகளிலேயே பரம ஏழைகளாக வாழும் மக்கள், விவசாயிகள், குத்தகை விவசாயத்தொழிலில் உள்ளவர்கள் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் பீடித் தொழிலாளர்கள் சந்தால் இனம் மற்றும் பிற பழங்குடி இனத்தவர்களின் பாசத்தையும் நன்மதிப்பையும் வென்றெடுத்தார். தோழர் சிப்தாஸ் கோஷின் சிந்தனைகளை ஊடுருவும் வகையில் இவர்களின் ஆழ்மனதிற்குள் எடுத்துச் சென்று காலங்காலமாக மிகச் கொடூரமாக ஒடுக்கப்பட்டு நசுக்கப்பட்டுவந்த இம்மக்களை மிகுந்த சிரமப்பட்டு ஸ்தாபகப்படுத்தி, தங்களை சுரண்டி ஒடுக்கி வந்த பண்ணையார்கள் மற்றும் சுயநல பணக்காரர்களுக்கு எதிராக அவர்களை குலை நடுங்க வைக்கும் மாபெரும் மக்கள் இயக்கங்களைத் திரண்டெழச்செய்தார்.

சுரண்டப்பட்ட மக்களுக்கு மிக நெருக்கமாக தோழராக மாறிய இவர், நேசமிக்க மூத்த சகோதரி (தீதிமோனி) என்று அறியப்படலானார். இந்த இயக்கங்களுக்கு பதிலடியாக பண்ணைக்காரர்களின் சார்பாக அன்றைய மாநிலக் காங்கிரஸ் அரசாங்கத்தின் போலீஸ்துறை ஏழைமக்கள் மீதும் தோழர் பிரதிபாமுகர்ஜிமீதும் திட்டமிட்டு கைது வாரண்ட் பிறப்பித்தது. ஆனால் மக்கள் உறுதியாக நின்று காவல் துறையின் இவ்வாறான திட்டங்கள் மற்றும் தாக்குதல்களிலிருந்து தங்களது ‘தீதிமோனியை’ எப்பொழுதும் காப்பாற்றினர். அத்தகைய சம்பவங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றும் உள்ளது என தோழர் சுமன்போஸ் கூறினார். காங்சியா கிராமத்தில் மலைவாழ் நாடோடி சமூகமான போடோ சமூகத்தினர் இருந்தனர். இவர்கள் பண்ணைக்காரர்கள் நடுங்கும் அளவிற்கு கொள்ளைக் கூட்டங்களை அமைத்திருந்தனர். பணக்கார விவசாயிகள் தோழர் பிரதிபா முகர்ஜியை கொலை செய்வதற்காக அவரைச் சந்திப்பதற்கான கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருப்பதை அம்மலைவாழ் போடோ சமூகத்தினர் கேள்வியுற்றனர். இயல்பாகவே துணிச்சல் கொண்ட பிரதிபா முகர்ஜியும் அக்கூட்டத்திற்கு செல்ல, அங்கு சதிகார பணக்கார விவசாயிகள் அவரை சண்டைக்கு இழுப்பதுபோன்ற ஆத்திரமூட்டும்படியான கேள்விகளையும் அவதூறுகளையும் அள்ளி வீசினர். திடீரென மேற்குறிப்பிட்ட போடோ சமூகத்தினர் தோன்றி அக்கூட்டத்தைச் சூழ்ந்து நாற்காலியில் அமர்ந்திருந்த தோழர் பிரதிபா முகர்ஜியை தூக்கிச்சென்றுவிட்டனர். அவரை கடுமையாகக் கண்டிக்கவும் செய்தனர். இச்செயல் தங்களின் ‘தீதிமோனி’ மீது அவர்கள் கொண்டிருந்த மிகுந்த அக்கறையை எடுத்துக்காட்டியது. நன்றியுடன் தோழர் பிரதிபா முகர்ஜியும் அவர்களுடன் நீண்ட விவாதத்தை நடத்தினார். அதன்முடிவில் அம்மலைவாழ் வகுப்பினர் தங்களின் குற்றப் பாதையை விடுத்து கட்சியின் செயல்வீரர்களாக இணைந்துவிட்டனர். தோழர் பிரதிபா முகர்ஜியின் ஸ்தாபகத் திறமையும் செல்வாக்கும் தலைமையும் இவையாவும் இணைந்து மாநில அவைத் தேர்தலில் அவருக்கு வெற்றியைத் தேடித்தந்தது.

1969 ல் இரண்டாம் முறை அமைக்கப்பட்ட ஐக்கியமுன்னணித் தேர்தலில் அவர் அமைச்சரானார். பின்னாளில் அவர் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் (AIKKMS) அகில இந்திய யுனைட்டெட் டிரேட் யூனியன் சென்டர் (AIUTUC) ஆகிய அமைப்புகளின் முக்கியப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார். அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கத்தின் (AIMSS) தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

தோழர் சிப்தாஸ் கோஷின் சிந்தனைகளால் ஆயுதம் தரித்துக்கொண்ட தோழர் பிரதிபா முகர்ஜி, எஸ்.யு.சி.ஐ (கம்யூனிஸ்ட்) கட்சி மக்களால் அறியப்படாத அந்தக் காலகட்டத்திலேயே அவருக்கு வழங்கப்பட்ட கடமைகளை சவாலாக எடுத்துக்கொண்டு நிறைவேற்றினார்.

இன்று சூழ்நிலை எளிதாகியிருக்கின்றது. உழைக்கும் மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற்றுள்ளதால் அதன் வலிமையைக் கொண்டு கட்சி வெகுஜன மற்றும் வர்க்கப் போராட்ட இயக்கங்களை திறனுடன் நடத்த முடியும். எனவே அனைத்துத் தோழர்களும் குறிப்பாக இளைய தோழர்கள் தோழர்பிரதிபாமுகர்ஜியின் வாழ்க்கையிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு புதிய புதிய இடங்களில் எல்லாம் கட்சி ஸ்தாபனத்தைக் கட்டும் சவாலை துணிவுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுவே காலஞ்சென்ற தலைவருக்கு சிறந்த வகையில் நாம் செலுத்தும் அஞ்சலியாகும். ■

***டெல்லியில் 5 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதைக் கண்டித்து அகில இந்திய மகளிர் கலாச்சாரச் சங்கம் (AIMSS), அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO), அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம் (AIDYO) ஆகியவை ஏப்ரல் 26, 2013 அன்று தேனியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.***




**சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக**
**அச்சிட்டு-வெளியிடுபவர்: வி பி நந்தகுமார், அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112**
**அச்சகம்: அய்யனார் ஆப்செட், எண் 10, சுப்பாராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094. ஆசிரியர்: வி பி நந்தகுமார்**
**Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee**
from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094.
Editor : V P Nandakumar Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.suci-c.in**